வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 15.05.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 160 | பக்கங்கள் : 20



07
இந்தியா மற்றும் மேலை நாடுகளின் விருப்பப் பிரதிநிதி ரணில்!



08
மகிந்த ராஜபக்சவின் வீழ்ச்சியின் பாடங்கள்



10
இலங்கை நெருக்கடியில் இந்தியா உதவுவது ஏன்?



16
விண்வெளிக் குப்பையும் வெப்ப சலனமும்

# இலங்கையில் தாக்குதல்கள் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் மீள இணைகின்றனர்!

## இந்திய புலனாய்வு அமைப்புகளை மேற்கோள்காட்டி தி இந்து செய்தி

கொழும்பு, மே. 15
இலங்கையில் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் ஒன்றிணைவதாக இந்திய புலனாய்வு அமைப்புக்களை மேற்கோள்காட்டி இந்தியாவின் தி இந்து ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் இனப்படுகொலை வாரமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை தமிழ் மக்கள் அனுசரித்து வரும் நிலையில் இந்திய புலனாய்வு அமைப்புகள் இவ்வாறு எச்சரித்துள்ளன.

இது தொடர்பில் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாடு ஆழமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மீண்டும் இலங்கையில் தாக்குதல்களை நடத்தத் தயாராகி வருவதாக இந்திய புல

19


TAMIL NADU
Intelligence agencies alert on regrouping of ex-LTTE cadres
S. Vijay Kumar
'Sri Lankan Tamil outfits abroad have planned attacks to mark Mullivaikal anniversary'
Intelligence agencies have warned of erstwhile cadre of the banned Liberation Tigers of Tamil Eelam (LTTE) regrouping to launch attacks in Sri Lanka, as the

# ரணிலின் சட்ட சீரமைப்புக் குழுவுக்கு தலைமை தாங்க சுமந்திரன் சம்மதம்



## அரசின் சிறந்த செயற்பாடுகளுக்கும் ஆதரவாம்!

கொழும்பு, மே. 15
பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால், பாராளுமன்றத்தின் கீழ் புதிதாக அமைக்கப்படவுள்ள சட்ட மறுசீரமைப்புக் குழுவுக்கு தலைமை தாங்குவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

19

# சஜித்துக்கு ரணில் கடிதம்!

கொழும்பு, மே. 15
பிரதமர் ரணில் விக்ரம சிங்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.
இதில், சர்வ தேச உதவியுடன்

19

# சஜித், மைத்திரி அணி எம்.பிக்கள் ரணிலின் அரசுக்கு ஆதரவளிப்பர்?

கொழும்பு,
ஐக்கிய மக்கள் சக்தியின் சுமார் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளனர் என தகவல்

19

# ரணிலின் அரசுக்கு பெரமுன ஆதரவு!

கொழும்பு, மே. 15
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க பொதுஜன பெரமுன நேற்று தீர்மானித்துள்ளது.

19

# ராஜபக்ஷ இல்லாத ஆட்சியே நாட்டு மக்கள் கோருகின்றனர்

## பிரதமர் ரணிலுக்கு சஜித் பதில் கடிதம்

கொழும்பு, மே. 15
புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கடிதத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பதிலளித்

19

# ரணிலுக்கு ஈ.பி.டி.பி. முழுமையான ஆதரவு

கொழும்பு, மே. 15
ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் அமைக்கப்படவுள்ள புதிய அரசாங்கத்துக்கு ஆத

19

# ரணிலின் புதிய அரசுக்கு ஆதரவளிக்கிறார் விக்கி

கொழும்பு, மே. 15
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசுக்கு ஆதரவளிக்க தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தீர்மானித்துள்ளார்.
"எமது கட்சியில் நான் மாத்திரமே நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றேன். இந்நிலையில், நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி பிரதமர் ரணில்


19

# புதிய அமைச்சர்கள் நால்வர் பதவியேற்பு

கொழும்பு, மே. 15
புதிய அமைச்சர்கள் நால்வர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். அந்தவகையில் தினேஷ் குணவர்தன பொது நிர்வாக அமைச்சராகவும் ஜி.எல்.பீரிஸ், வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சர

19

# ராஜபக்ஷ அரசின் கொள்கைகளை உடனடியாக மாற்றுவதற்கு தயார்!



## பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, மே. 15
ராஜபக்ஷ அரசின் கொள்கைகளை உடனடியாக மாற்றத் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
பி.பி.சி உலக சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தொடர்ந்து

19

# முள்ளிவாய்க்கால் நினைவுக்கு பொலிஸார் இடையூறு செய்யாமல் இருக்க உதவுங்கள்!

## பிரதமருக்கு சி.வி.கே.சிவஞானம் கடிதம்

யாழ்ப்பாணம், மே. 15
முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு அஞ்சலி மற்றும் பிரார்த்தனை நிகழ்வுகளில் தலையிடாதிருப்பதற்கான பணிப்புகளை முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்குமாறு கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ. சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கடிதம் ஒன்றை பிரதமருக்கு சிவஞானம் அனுப்பி வைத்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

தொலைக்காட்சி ஒன்றில் ஒரு விவசாயியை பேட்டி எடுத்தார்கள். அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளையும் அதற்கு அவர் அளித்த பதிலையும் அப்படியே கீழே தருகிறேன்.

“உங்க ஆட்டுக்கு என்ன சாப்பிட குடுக்கிறீங்க..? ”
“கருப்பு ஆட்டுக்கா..? வெள்ளை ஆட்டுக்கா..?”
“வெள்ளைக்கு..!”
“புல்லு..!”
“அப்ப கருப்புக்கு..?”
“அதுக்கும் புல்லுதான் குடுக்கிறன்..!”
“இதை எங்கே கட்டி போடறீங்க..?”
“எதை.. கருப்பையா..? வெள்ளையையா..?”
“வெள்ளையை..!”
“வெளில இருக்குற ரூம்ல...”
“அப்ப கருப்பு ஆட்டை...?”
“அதையும் வெளில இருக்குற ரூம்லதான்..!”
“எப்படி குளிப்பாட்டுவீங்க..?”
“எதை.., கருப்பையா..? வெள்ளையையா..?”
“கருப்பு ஆட்டை..!”
“தண்ணியில தான்!”
“அப்ப வெள்ளையை..?”
“அதையும் தண்ணியிலதான்..!”
பேட்டி எடுக்கிறவர் இப்போது கடுப்பாகிவிடுறார்..
“லூசாய்யா நீ? ரெண்டுக்கும் ஒரே மாதிரிதானே செய்யறே, அப்புறம் எதுக்கு திரும்ப திரும்ப வெள்ளையா? கருப்பான்னு கேட்டுட்டே இருக்கிறாய்?”
“ஏன்னா வெள்ளை ஆடு என்னுடையது.”
“அப்ப கருப்பு ஆடு..?”
“அதுவும் என்னுடையதுதான்!”

இது ஒரு சாதாரண விவசாயி தனக்கு தெரிந்த வகையில் கேள்விகளுக்கு பதிலளித்தவை. ஆனால், இதேபோல கேள்விகளுக்கு ஒரு புத்திஜீவி, அல்லது நன்கு படித்த ஒருவர் பதிலளிக்கின்றார் என்றால், அது அவர் ஏதோ குழம்பிப்போயிருக்கிறார் என்று அர்த்தப்படும். அவர் அந்த தவறை தெரிந்துகொண்டு செய்யவில்லை. அவருக்கே தெரியாமல் செய்கிறார் என்றால், அவர் குழப்பத்தில் இருக்கிறார் என்றே கொள்ளவேண்டும்.

- இது, அண்மையில் மிகவும் ரசித்து படித்த ஒரு துணுக்கு என்பதால் அதனை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். அதற்காக, இனி எழுதப்போகின்ற விடயத்துக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஆபிரகாம் சுமந்திரன், இந்தியாவில் உள்ள பிரபல ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தற்போது பலாலியில் இருப்பதாகவும், அங்கிருந்து அவர் ஆபிரிக்க நாடொன்றுக்கு தப்பிச் செல்லக்கூடும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் மிக நெருக்கமாக இருந்தவர் சுமந்திரன். ரணிலிடமிருந்து மைத்திரி பிரதமர் பதவியை பறித்தபோது, ரணிலைவிட அதிகம் ஆத்திரமடைந்தவர் சுமந்திரன். ஆனால், அதே சுமந்திரன் அவர் தேர்தலில் படுதோல்வியடைந்த பின்னர், அவரது தோல்வியை எள்ளி நகையாடியதையும் பார்க்க முடிந்தது.

இப்போது ரணில் பிரதமரானதும், அவரை தோல்வியடைந்த ஒரு தலைவர் என்று வர்ணித்த சுமந்திரனே, ‘இப்போது அவரது ஆட்சிக்கு உச்ச பட்ச ஆதரவு வழங்கப்படும்’ என்று ‘லங்காதீப’ பத்திரிகைக்கு வழங்கிய செய்தியில் தெரிவித்திருந்ததை நேற்று இந்தப் பத்தியில் பார்த்தோம்.

இப்போது, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் பாராளுமன்றத்தின்கீழ் புதிதாக உருவாக்கப்படவுள்ள சட்ட மறுசீரமைப்புக் குழுவுக்கு தலைமைதாங்க சுமந்திரன் இணக்கம் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் தோல்வியடைந்ததும் அவரைத் தூற்றுவதும் எள்ளிநகையாடுவதும், பின்னர் அவர் பதவிக்கு வந்ததும் அவருடன் உறவாடுவதும் இரண்டாம்தர அரசியல்வாதிகளுக்கு வேண்டுமானால் சரியானதாக இருக்கலாம். ஆனால், சுமந்திரனை அப்படியோர் அரசியல்வாதியாக தமிழ் மக்கள் பார்க்கவில்லை என்பது அவருக்கு தெரியவில்லையோ என்பது புரியவில்லை.

பிலிப்பைனில் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட சர்வாதிகாரி மார்க்கோஸின் மகன், முப்பத்தியாறு ஆண்டுகளின் பின்னர் அண்மையில் பிலிப்பைன் மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிப் பீடம் ஏறியிருக்கிறார்.

இன்று மக்களால் துரத்தப்படுபவர்கள், நாளை அதே மக்களால் கொண்டாடப்படவும் கூடும்.

- ஊர்க்குருவி.

# ரணில் அரசில் நாங்கள் பங்கேற்க மாட்டோம்

## தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவிப்பு

கொழும்பு, மே. 15

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கேற்காது என தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்துள்ளது.

அதேநேரம் அரசை உடனடியாக காலில் இழுத்து வீழ்த்தும் எந்தவொரு முயற்சிக்கும் ஆதரவளிக்கவும் மாட்டோம். பொது மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு குறைந்த பட்ச தீர்வுகளை காண புதிய அரசுக்கு அவகாசம் தேவை என்பதை நாம் ஏற்கிறோம் எனவும் தமிழ் தமிழ் முற்போக்கு கூட்டணி கூறியுள்ளது.

தமது அரசில் பங்கேற்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமக்கு அழைப்பு விடுத்தார். அவரது அழைப்புக்கு நன்றி கூறி, கொள்கை அடிப்படையில் அதை நாம் நாகரீகமாக மறுத்து விட்டோம். ஆனால் அதற்காக நாம் கட்சி அரசியல் செய்து கூச்சல், குழப்பம் விளைவிக்க விரும்பவில்லை. வாழ்வாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் மக்களை மீட்க அவரால் இயன்றதை பிரதமர் செய்யட்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கூட்டணி சார்பில் மனோ கணேசன் எம்.பி.மேலும் கூறியுள்ளதாவது: -

ரணில் விக்கிரமசிங்க, எமது முன்னாள் பிரதமர். அவரது பலமும், பலவீனமும் எமக்கு நன்கு தெரியும். பலவீனம் பற்றி இப்போது பேசி ஜனரஞ்சக அரசியல் செய்ய தமிழ் முற்போக்கு கூட்டணியில் எவரும் விரும்பவில்லை. சர்வதேச தொடர்பாடல் தொடர்பான, ரணிலின் பலம் மூலம் நாட்டுக்கு நன்மை நடக்குமாயின் அதை நான் முழு மனதுடன் வரவேற்கிறோம்.

இன்று நாட்டில் உணவு இல்லை. மருந்து இல்லை. எரிவாயு இல்லை. எரிநெய் இல்லை. உரம் இல்லை. மின்சாரம் இல்லை. இவற்றுக்கு குறைந்தபட்ச தீர்வுகளையாவது அவர் தரவேண்டும். பிரதமர் அதை செய்யட்டும். அதற்கு பொறுப்புள்ள கட்சியாக நாம் இடம் கொடுப்போம். ஆகவே இன்றைய சூழலில், பாராளுமன்றத்தில் அவரது அரசின் காலை இழுத்து விடும் எந்த வொரு முயற்சியையும் நாம் ஆதரிக்க மாட்டோம்.

நாட்டில் பொருளாதார பிரச்னைகள் உள்ளன. நமது நாடு வாங்கியுள்ள கடன்களை உரிய காலத்தில் திருப்பி செலுத்த முடியாதுள்ளது. ஆகவே கடன் தந்தோரிடம் பேசி கடன் திருப்பி செலுத்துவதை மறு அட்டவணைப் படுத்த வேண்டும்.

அத்தியாவசிய தேவைகளை பெற அமெரிக்க டொலர் இல்லாமல் உள்ளது. இதற்காக நட்பு நாடுகளிடம் கடன்வழி உதவிகளை, நாணய மாற்று உதவிகளை பெற வேண்டும். இந்தியா இவற்றை ஏற்கனவே வழங்கி வருகிறது. இவை இன்னமும் அதிகரிக்க வேண்டும். ஏற்கனவே உதவி தரும் நட்பு நாட்டு குழுமம் ஒன்றை ஏற்படுத்த பிரதமர் முயற்சி செய்கிறார். இது நல்லது. வரி கொள்கை சீரமைக்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பு ரீதியாக, குறைந்தபட்சம், 20ஐ வாபஸ் வாங்கி, மீண்டும் 19 ஐ கொண்டு வர வேண்டும். நாட்டின் குரலுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ பதவி விலக ஒரு கால அட்டவணை தயாராக வேண்டும். இனிமேல் ராஜபக்ஷர்களுக்கு இந்நாட்டு அரசியலில் இடம் தர மக்கள் தயாரில்லை. இதை பிரதமர் புரிந்துக்கொண்டுள்ளார் என நம்புகிறோம் - என்றார். (அ)

# ஓ.எல். பரீட்சார்த்திகளுக்கு அறிவிப்பு

கொழும்பு, மே. 15

இம்முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் பரீட்சார்த்திகளில் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் முதற்பக்கத்தில் எமது சேவைகளின் கீழ் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை 2021 (பரீட்சை அனுமதி பதிவிறக்கங்கள்) ஐகான் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் கீழ் சரியான தேசிய அடையாள அட்டை எண் அல்லது பரீட்சை எண்ணை உள்ளிட்டு, தொடர்புடைய அனுமதி அட்டையின் நகலை பதிவிறக்கம் செய்ய தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலைகள் மற்றும் தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மே 23ஆம் திகதி முதல் ஜூன் 1 ஆம் திகதி வரை நாடுமுழுவதும் 3 ஆயிரத்து 844 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

அனுமதி அட்டையில் பெயர் மாற்றங்கள், பாடத் திருத்தங்கள் மற்றும் மொழித் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைச் செய்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை திருத்தங்கள் மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வெசாக் தினத்தை முன்னிட்டு 244 கைதிகளுக்கு விடுதலை

கொழும்பு, மே. 15

வெசாக் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட விசேட அரச மன்னிப்பின் கீழ் 244 கைதிகளை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று வெசாக் தினத்தை முன்னிட்டு அரசியலமைப்பின் 34ஆவது சரத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இவ்வாறு 244 கைதிகளை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)




## வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!

வவுனியா, மே. 15

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் அனுஸ்டிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று வவுனியா மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

வவுனியா ஆலடி பிள்ளையார் கோவிலடியில் இடம் பெற்ற நிகழ்வில் முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்றதனை நினைவு கூர்ந்து இச்செயல்பாட்டை முன்னெடுத்ததாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை அக்கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் வீதியால் சென்றோருக்கும் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணிலுக்குத் தோள்கொடுக்க எம்.பிக்களாக பதவியேற்கவுள்ள ஐ.தே.க. உறுப்பினர்கள்?

கொழும்பு, மே. 15

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்கவுள்ளனர் என்று கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமராகப் பதவியேற்றுள்ள தமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவியாக இவர்கள் பாராளுமன்றம் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை பாராளுமன்றம் அனுப்புவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் 6 பேரைபதவி விலகச் செய்வதற்காக தற்போது அவர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி அவர்கள் பதவி விலக இணங்கும் பட்சத்தில் தேசியப்பட்டியல் உறுப்பினர்களாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் எம்.பிக்களாகப் பதவியேற்பார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, மருந்து, உரம், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய நான்கு குழுக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இருவேறு இடங்களில் யாழில் திருட்டு சம்பவம்

யாழ்ப்பாணம், மே. 15

யாழ். கல்வியங்காடு கட்டைப்பிராய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில், ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் நுழைந்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்த வயோதிபப் பெண்ணின் 2 பவுண் தங்கச்சங்கிலியை கொள்ளையடித்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, யாழ். உரும்பிராய் - கிருஷ்ணன் பகுதியில் அமைந்துள்ள கமநல சேவைகள் திணைக்களத்தில் வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தின் கலப்பையை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

உழவுத் தேவைக்காக கமநல திணைக்களத்தில் வைக்கப்பட்டிருந்த கலப்பையே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பிரதிச் சபாநாயகர் பதவி பெண் எம்.பி. ஒருவருக்கு

## பிரதமர் ரணில் கோரிக்கை

கொழும்பு, மே. 15

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு, பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வாய்ப்பளிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் இந்த நியமனம் இடம்பெறவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னர் இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நிகழ்வு நேற்று நவாலியில்

யாழ்ப்பாணம், மே. 15

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாள் நினைவேந்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் நவாலியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திற்கு அருகில் உள்ள நினைவுத்தூபியில் நேற்று காலை 9.30 மணியளவில் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நவாலி புனித பீற்றர்ஸ் தேவாலயத்தில் இலங்கை விமானப் படையினரின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கும் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



இதன்போது அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் - நவாலி புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் 1995 ஆடி மாதம் 9ஆம் திகதி அரச விமான தாக்குதலில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# எதிரி வீட்டுக்கு தீ வைக்காதீர்கள்!

## நிமல் லன்ஸா கோரிக்கை

கொழும்பு, மே. 15

சொத்துக்கள் அழிக்கப்படுவதையும், கொள்ளையடிப்பதை சமூகமயமாக்குவதையும் ஒரு சிறந்த நாடு மற்றும் சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்க்கும் எவராலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா தெரிவித்துள்ளார்.

முகநூலில் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், நாட்டின் எதிர்காலத்தை கையில் எடுக்கவிருக்கும் இளைஞர்கள் வன்முறையைத் தூண்டுவதுதான் இங்கு தீவிரமான நிலை. இவ்வாறான வன்முறைகளில் இருந்து இளைஞர் குழுக்களை விடுவித்து அவர்களை சரியான பாதையில் வழிநடத்த நீங்கள் அனைவரும் முன்வருவீர்கள் என நம்புகிறேன்.

எக்காரணம் கொண்டும் எதிரியின் வீட்டிற்கு தீ வைக்காதீர்கள். இந்த மாதிரியான அழிவை வேறு யாருக்கும் செய்யாதீர்கள். ஏனென்றால் ஒருவருடைய கனவு, எதிர்காலம், பெருமை மற்றும் மகிழ்ச்சி இருக்கிறது.

உங்கள் மத போதனைகளின் படி செற்படுங்கள் - என்று பதிவிட்டுள்ளார்.

சமீபத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களினால் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிமல் லன்ஸா உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள பல அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நுவரெலியாவில் உணவகமொன்றின் மாடியிலிருந்து குதித்தார் இளம் தாய்

கொழும்பு, மே. 15

நுவரெலியா - இராகலை நகரில் இயங்கும் உணவகம் ஒன்றின் மூன்றாவது மாடியிலிருந்து விழுந்த இளம் தாய் ஒருவர், பலத்த காயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியலவில் இடம்பெற்றுள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஒரு பிள்ளையின் தாயான இராகலை - ஹல்கரனோயா தோட்டத்தைச் சேர்ந்த பி.நித்தியபிரபா (வயது 35) என்ற இளம் தாயே மாடியிலிருந்து குதித்து, பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

குறித்த தாய் உணவகத்தின் மூன்றாவது மாடியில் தொழில் ஆரம்பித்த சில மணி நேரத்தில் ஜன்னல் வழியாக பாய்ந்ததாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்திற்கான காரணம் தொடர்பில் இராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மீனவர் ஒருவர் கடலில் வீழ்ந்து உயிரிழந்தார்!

மன்னார், மே. 15

மன்னார் சௌத்பார் பகுதியில் மீன்பிடிப்பதற்காக வலை பாய்ச்ச சென்ற மீனவர் எதிர்பாராத விதமாக மன்னார் புகையிரத பாலத்திற்கு அருகாமையில் உள்ள பள்ளத்தில் வீழ்ந்து காணாமல்போன நிலையின் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவத்தில் ஜாக்கிலின் றாகல் என்ற 29 வயதுடைய மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு வருகைதந்த மன்னார் பொலிஸார் மரணம் குறித்து மேலதிக விசாரனைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிக்க முடிவு!

கொழும்பு, மே. 15

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 6 பொலிஸ் உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உள்ளிட்ட ஆறு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பிரதேச பொலிஸ் நிலையங்களில் தற்போது கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் தமக்கு விருப்பமானவர்களை அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவில் இணைத்துக்கொண்டு தமது பாதுகாப்புச் சேவைகளுக்கு அவர்களை ஈடுபடுத்திக்கொள்ளக் கூடிய வாய்ப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் நாட்டில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களின்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும், அவர்களின் வீடுகளின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் மரணமடைந்துள்ளார்.

அதனைக் கவனத்தில் கொண்டே பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்குப் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

# சிட்னிக்கான முன்னாள் துணைத் தூதர் மரணம்

கொழும்பு, மே. 15

அவுஸ்திரேலியாவின் சிட்னிக்கான இலங்கையின் முன்னாள் துணைத் தூதுவராக கடமையாற்றிய லக்ஷ்மன் ஹூலுகல்ல தமது 66ஆவது வயதில் காலமானார்.

சிட்டினியில் நேற்றுக் காலை அவர் காலமானதாக அவரின் குடும்பத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மையத்தின் பணிப்பாளராகவும் அவர் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# சர்வதேச தொடர்பு ரணிலுக்கு உள்ளது

## அவரால் முடியும் என்கிறது மொட்டு கட்சி

**கொழும்பு,மே15**

**“நாட்டுக்கு டொலர் வருமானால், வரிசை யுகம் முடிவுக்கு கொண்டுவரப்படுமானால், பிசாசு பிரதமராக இருந்தால்கூட ஆதரவு வழங்கியாக வேண்டும்.”**



- இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எம். சந்திரசேன நேற்று தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்படுமா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ரணிலின் அரசியல் கொள்கையுடன் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனாலும் அவருக்கு சர்வதேச தொடர்பு உள்ளது. அந்த தொடர்பை பயன்படுத்தி நாட்டுக்கு டொலர் வருமானால், வரிசை யுகத்துக்கு முடிவு கட்டப்படுமானால், எரிபொருள் வழங்கப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்க வேண்டும். இந்த வேலையை ஒரு பேய் செய்தால்கூட ஆதரவு வழங்க வேண்டும்.

எவ்வித நிபந்தனையும் இன்றி நாட்டுக்காக சவாலை ரணில் ஏற்றுள்ளார். அதனை வரவேற்க வேண்டும் - என்றார். (அ)

# நாட்டில் எரிபொருள் நெருக்கடி 17 ஆம் திகதிக்கு பின் மோசம்!

கொழும்பு, மே. 15

இம்மாதம் 17ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டில் எரிபொருள் நெருக்கடி மோசமடையும் என தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயம் நிலவி வருவதாகவும் அவர் கூறினார்.

தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ள அரச பொறிமுறையானது திறமையற்றதாக இருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏப்ரல் 29 ஆம் திகதிக்கு பின்னர் அரசாங்கம் இந்தியாவில் இருந்து டீசல் இறக்குமதி செய்யவில்லை.

பெப்ரவரி 21ஆம் திகதி முதல் 95 ஒக்ரேன் பெற்றோல் தட்டுப்பாடு நிலவுகிறது. மக்களின் குறைகளுக்கு ஜனாதிபதியிடம் பதில் இல்லை.

எல்பி எரிவாயு ஏற்றுமதியை சரியான நேரத்தில் வெளியிடுவதில் அரசாங்கம் தவறிவிட்டது. ஏனெனில் விலைக்கு கூடுதலாக கப்பலின் தாமதக் கட்டணம் செலுத்தவேண்டியிருந்தது - என்றார். (அ)

# இராஜாங்க அமைச்சுகள் இல்லை?

கொழும்பு, மே. 15

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை 20 அமைச்சர்களுக்கு மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட 20 அமைச்சர்களைக் கொண்டதாக புதிய அமைச்சரவை அமையும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கு மேலதிகமாக அதிகளவு எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்ட அமைச்சுக்களுக்கு மாத்திரம் பிரதியமைச்சர்களை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதா இல்லையா என்பது தொடர்பில் பேச்சு நடத்தப் பட்டு வரும் நிலையில் அதற் கான இறுதித் தீர்மானம் இது வரை மேற்கொள்ளப்பட வில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

அடுத்த வாரம் பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில் அதற்கு முன்பதாக அமைச்சரவை நியமிக்கப்பட்டு அமைச்சர்களுக்கான சத்தியப் பிரமாணம் வழங்கப்படும் என்றும், எனினும் அமைச்சர்களுக்கான விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இரண்டு வாரங்கள் தேவைப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# ரணிலின் ஆட்சியை கவிழ்க்கமாட்டோம்!

## விமல் வீரவன்ஸ உறுதி



கொழும்பு, மே. 15

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பங்களிப்புடன் உருவாகியுள்ள இந்த அரசையும் சீர்குலைத்து, நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்ல நாம் தயார் இல்லை. எதிரணியில் இருந்துகொண்டு ஆதரவு வழங்கப்படும். 10 கட்சிகளின் நிலைப்பாடு இதுவோகவே உள்ளது.”

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்பு கூறவேண்டும். அவரின் ஆட்சி காலத்தில்தான் கூடுதல் கடன்கள் பெறப்பட்டன. மேலும் பல விடயங்களும் இடம்பெற்றன. எம்மை பொறுத்தவரையில் பஸில் ராஜபக்சவும், ரணில் விக்கிரசிங்கவும் ஒன்றுதான். பஸில் சால்வை அணிந்த ராஜபக்ஷ. ரணில் கோட்சூட் அணிந்த ராஜபக்ஷ.

எனவேதான் அரசில் இணைந்து, பதவிகளை ஏற்பதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது. 10 கட்சிகளும் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும்.

அதற்காக இந்த அரசை சீர்குலைப்பதோ அல்லது நாட்டை வங்குரோத்து அடைய வைப்பதோ எமது நோக்கம் அல்ல. அரசால் முன்னெடுக்கப்படும் நல்ல திட்டங்களுக்கு எதிரணியில் இருந்து ஆதரவு வழங்கப்படும். ஏனெனில் பொறுப்பு மிக்கதொரு வகிபாகத்தை பாராளுமன்றத்தில் வகிக்கவுள்ளோம். நாட்டுக்கு தீங்கு விளைவிக்ககூடிய திட்டங்களுக்கு எதிர்ப்பை வெளியிடுவோம். நெருக்கடி நிலைமையை பயன்படுத்தி எம்.சீ.சீ. உள்ளிட்ட விடயங்களை செய்து முடிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது - என்றார். (அ)

# ரஞ்சன் ரமநாயக்கவை விடுவிக்க கோரிக்கை

கொழும்பு, மே. 15

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யக் கோரி வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்த போராட்டத்தில் நடிகர்கள் மற்றும் கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

ராமநாயக்க அரசியல் பழிவாங்கலுக்கு ஆளானவர் என்பதால், இன்று வெசாக் போயா தினத்தன்று அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று அந்த குழுவினர் கோரிக்கை விடுத்தனர். (அ)

# அதிக விலைக்கு அரிசியை விற்போர் மீது நடவடிக்கை

கொழும்பு, மே. 15

அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் தனி உரிமையாளராக இருந்தால் 100,000 ரூபா முதல் 500,000 ரூபா வரையில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது. அத்துடன் தனியார் நிறு வனம் அதிக விலைக்கு அரி சியை விற்பனை செய்தால் அவர் களுக்கு 500,000 ரூபா முதல் அதிகபட்சமாக 5 மில்லியன் ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

மேலும், அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு நடைபவனி!

அம்பாறை, மே. 15

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தினை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையிலான நடைபவனியை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இந்த நடைபவனியில் அனைத்து தமிழ் உறவுகளையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு வடகிழக்கு மாகாண வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்ட தலைவி திருமதி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் முள்ளிவாய்க்காலில் இன்னுயிர்களை ஈத்த உறவுகளுக்கான கஞ்சி வாரம் இன்று மூன்றாவது நாளாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

12ஆம் திகதி தொடங்கிய இந்த கஞ்சி வாரம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முன்றலில் நிறைவடையவுள்ளது. இன்று நடைபெறவுள்ள பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான நடைபவனிக்கு எட்டு மாவட்டத்தைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடன் பாதிரியார்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மீனவ சங்கங்கள், முச்சக்கர வண்டி சங்கங்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள், அனைத்து பொதுமக்களையும் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30க்கு நடைபவனியானது பொத்துவிலில் ஆரம்பித்து திருக்கோவில், அக்கரைப்பற்று, கல்முனை, களுவாஞ்சிகுடி ஊடாக கல்லடி பாலம் வரையில் வருகைதந்து அன்றைய தினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி கல்லடி பாலத்தில் விநியோகிக்கப்பட்டு நாளை திங்கட்கிழமை திருகோணமலை நோக்கி பயணம் அமையும்.

17ஆம் திகதி திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவைச் சென்றடைந்து 18ஆம் திகதி முல்லைதீவிலிருந்து முள்ளிவாய்க்காலுக்கு சென்று அங்கு உயிர்நீர்த்த,படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு நினைவேந்தல் வாரம் முடிவுக்கு கொண்டுவரப்படும். இதேபோன்று யாழ்ப்பாணத்திருந்தும் நடைபவனி ஆரம்பமாகி 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலை வந்தடையும்.

இன்று எங்களுக்காகவும் தமிழ் உறவுகளுக்காகவும் இளம் தமிழ் சமூகம் இந்த மண்ணில் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகவே நாங்கள் இந்த போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றோம்.

காணாமல்ஆக்கப்பட்டது எங்கள் உயிர்கள். அவர்கள் கிழித்தெறிவதற்கு கடிதாசிகளும் அல்லர். பிசைந்தெறிவதற்கு வேறு பொருட்களும் அல்லர்.விலைமதிக்க முடியாத உயிர்களையே நாங்கள் தொலைத்து நிற்கின்றோம்.

இறுதி யுத்ததின்போது ஒரு இலட்சத்தி 47ஆயிரம் உறவுகளுக்கு மேல் நாங்கள் இழந்து நிற்கின்றோம். முள்ளிவாய்க்காலில் வரிசையில் கஞ்சிக்காக குழந்தைகள், பெரியவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் என நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தபோது விமானப் படையினர் அவர்கள் மீது குண்டுவீசி அந்த வரிசையே இரத்த ஆறாக ஓடியது.

அங்கு இருந்த பிள்ளையொன்று இறந்துகிடந்த தனது தாயில் கையிலிருந்த கஞ்சி கோப்பையை எடுத்து உண்ட காட்சியை கண்டவள் என்ற அடிப்படையில் இவ்வாறான சம்பங்களை மறக்கமுடியாது. இவ்வாறான சம்பவங்கள் எமது உறவுகளுக்கு எந்த காலத்திலும் நடக்கக்கூடாது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
15.05.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தடுமாற்ற அரசியல்?

ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக, பதவியேற்றிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், அது ஜனநாயக விரோதமென்றும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். நல்லாட்சியென்று அழைக்கப்பட்ட அரசாங்க காலத்தில், ரணில் விக்கிரமசிங்கவிற்கும் கூட்டமைப்பிற்கும் இடையில் மிகவும் நெருக்கமான உறவு நிலவியது. குறிப்பாக சம்பந்தனும், சுமந்திரனும் மிகவும் நெருக்கமாக செயற்பட்டிருந்தனர். சம்பந்தனை, எதிர்கட்சித் தலைவராக கொண்டுவருவதிலும், ரணில் பிரதான பங்கு வகித்திருந்தார்.

இது அரசியல் வட்டாரத்தில் இரகசியமான ஒன்றல்ல. ரணில் விக்கிரமசிங்க, மிகவும் புத்திக் கூர்மையானவரென்று, சுமந்திரனே நற்சான்றிதழும் வழங்கியிருக்கின்றார். அதில் சந்தேகமில்லை. ரணில் புத்திக் கூர்மையானவர்தான். இல்லாவிட்டால், ஒரு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரை வைத்திருந்தவர், நாட்டின் பிரதமராக வந்திருக்க முடியாது.

2009இற்கு பின்னரான அரசியல் சூழலில், தமிழர் தரப்பின் ஒரேயொரு ஆறுதலாக இருப்பது - சர்வதேச சமூகம் ஒன்றுதான். குறிப்பாக, அமெரிக்கா தலைமையிலான மேற்குலக தாராளவாத ஜனநாயக நாடுகளின் தலையீட்டின் காரணமாகவே, இலங்கையின் மீதான, அழுத்தங்கள், ஜக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தொடர்கின்றது. குறிப்பாக அமெரிக்காவின் ஆதரவில்லாவிட்டால், சர்வதேச அழுத்தங்கள் என்பவை, வெறும் அறிக்கைகளில் மட்டுமே இருக்கும்.

ஏனெனில், வேறு எந்தவொரு நாடுகளினாலும், பிற நாடுகளின் மீதான அழுத்தங்களுக்கு தலைமையேற்க முடியாது. ஒப்பீட்டடிப்படையில், ஐரோப்பிய ஒன்றியத்தால், ஆடையேற்றுமதிக்கு வழங்கப்படும், ஜி.எஸ்.பி வரிச் சலுகையை இல்லாமலாக்க முடியும். அதைத் தவிர வேறு எதனையும் பெரிதாக செய்துவிட முடியாது. இந்த நிலையில், இலங்கையின் நிலைமைகளை அமெரிக்கா மற்றும் இந்தியா எவ்வாறு நோக்குகின்றது? - என்பதும் முக்கியமானது.

ரணில் விக்கிரமசிங்க, பதவியேற்றதைத் தொடர்ந்து, உடனடியாகவே, அமெரிக்க தூதுவர், நெருக்கடியை தணிப்பதற்கான ஒரு ஆரம்பக்கட்ட நகர்வென்னும் வகையில், தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார். அமெரிக்க தூதுவர், ரணிலின் நகர்வை ஒரு ஜனநாயக விரோத செயலென்று கூறவில்லை. அதே போன்று, இந்தியாவும், ரணில் பிரதமராக பொறுப்பேற்றதை, வரவேற்றிருக்கின்றது. ரணில், தனது முதலாவது வெளிநாட்டு பயணமாக, இந்தியாவிற்கு அடுத்த வாரம் செல்லலாம்.

இவ்வாறானதொரு சூழலில், ரணிலின் நகர்வை, உடனடியாகவே, எதிர்ப்பதும், அதனை பொது வெளிகளில் விமர்சிப்பதும் ஆரோக்கியமான ஒன்றா? ஏனெனில் ரணிலுடன், சில விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பு, ஏதோவொரு வகையில் பணியாற்ற வேண்டியிருக்கும். ரணில் தொடர்பான அவசரமான அறிக்கைகள், தமிழ் அரசியல் தரப்புக்களின் குழப்ப நிலைமைக்கு சிறந்த சான்றாகும். முன்னர் ரணிலுடன் நெருக்கமாக செயற்பட்டவர்களால் எவ்வாறு திடீரென்று, ரணிலை தவறென்று கூறமுடியும்?

எனவே ரணிலின் செயற்பாடுகளை சிறிது காலம் அவதானித்த பின்னர்தான், அவர் தொடர்பான அறிக்கைகளை வெளியிட வேண்டும். மேலும், ரணில் மேற்கு சார்பானவர் என்னும் தோற்றமும் உண்டு. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய தமிழ் தேசிய தரப்புக்களும் நிதானமாகவும், அவதானமாகவும் விடயங்களை அணுகவேண்டும். உணர்சிவசப்பட்டு விடயங்களை அணுகக் கூடாது.

**வாரசாரம்** - *அரசியல் நிருபர்*

# மஹிந்த என்ன நினைத்தார்?



*சுதந்திர இலங்கையில் ஐக்கிய தேசிய கட்சியும் (ஐ. தே. க.) சிறிலங்கா சுதந்திர கட்சியும் மாறிமாறி ஆட்சியை அமைத்தாலும், தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அல்லாது மொத்த வாக்குகள் எண்ணிக்கையில் ஐக்கிய தேசிய கட்சியே அது ஆட்சியை அமைக்காத வேளைகளிலும் அதி கூடிய வாக்குகளை பெற்றது. அதனால்தான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இலங்கையில் கொணர்ந்த ஜே. ஆர். ஜயவர்த்தன, இலங்கையின் தேர்தல் முறைமையையும் விகிதாசார முறைமைக்கு மாற்றினார். அதன் மூலம், இலங்கை எப்போதுமே ஐ. தே. க. வின் ஆட்சிலேயே இருக்கவேண்டும் என்பது ஜே. ஆரின் கனவாக இருந்தது. அந்த கனவு காலத்தில், தனது மருகரான ரணில் விக்கிரமசிங்கவை தன்னுடைய அசியல் வாரிசாகவும் வரித்தவர் ஜே. ஆர்.*

*ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் 1977 பொதுத் தேர்தலில் ஐ. தே. க. அந்த அமோக வெற்றியைப்பெற்றபோது, 28ஆவது வயதில், பியகம தொகுதியின் உறுப்பினராக பாராளுமன்ற அரசியலுள் பிரவேசித்தவர் ரணில் விக்கிரமசிங்க. பிரதி வெளிவிவகார அமைச்சராக்கிய சில நாள்களிலேயே இலங்கை அமைச்சரவையில் மிக இள வயதினர் என்ற பெருமையையும் சேர்த்து இளைஞர் விவகார, வேலைவாய்ப்பு அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவை ஜே. ஆர். ஜயவர்த்தன ஆக்கினார். பின்னர் சிறிது காலத்தில் உயர் கல்வி அமைச்சராக்கினார். இப்படி, 'கிழ நரி' ஜே. ஆரால் கவனத்துடன் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டவர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால், ஜே. ஆர். எதிர்பார்த்தபடி எல்லாமே நடக்கவில்லை - அரசியலில் எல்லாமே அப்படி நடந்துவிடவும் மாட்டாது.*

*காலம் முழுவதும் ஐக்கிய தேசிய கட்சி இலங்கையை ஆளவேண்டும் என்று ஜே. ஆர். விரும்பியபோது. அந்தக் கட்சி பாராளுமன்றத்தில் ஓர் ஆசனத்தைக்கூட தேர்தலில் வெல்லாத நிலை கடந்த தேர்தலில் அதன் வரலாறாகியது. இறுமாப்புடன் அவர் கொணர்ந்த ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க, குரல்கள் ஓங்கி எழுகின்றன.*

*ஆனாலும், நெருக்கடிகளுள் ஸ்தம்பிதமடைந்துபோயுள்ள இந் நாட்டை அதில் சற்று நகர்த்தவல்ல ஒரேயொருவராக ஜே. ஆரின் ரணில் விக்கிரமசிங்கதான் தெரிகிறார். அதில், அவர் புதிய பிரதமராகியிருக்கிறார்.*

*நாடு இன்று சிக்கியுள்ள நெருக்கடியில் - அந்த நெருக்கடியிலிருந்து மக்களுக்கான விரைவான மீட்சியில் - அந்த மீட்சி வெளிநாடுகளையும் சார்ந்திருக்கையில் - அதற்காக ஓர் இடைக்கால அரசுதான் அவசியமாகின்ற போது, அந்த இடைக்கால அரசின் பிரதமராக பாராளுமன்ற உறுப்பினர் ரணில் 'தெரிவாகி', பதவிப் பிரமாணம் செய்திருக்கிறார்.*

*இந்த வேளையில் எழுகின்ற அரசியல் விமர்சனங்கள் இயல்பானவையே. அவை, முற்றிலும் நியாயமானவையாகவோ அல்லது முற்றிலும் நிராகரிக்கப்படவேண்டியவையாகவோ இருந்துவிடமாட்டா. ஆனால், கட்சி நலன்களுக்கு அப்பால், ஓர் அமைப்பு முறை மாற்றத்துடன், நாட்டு மக்களின் நிரந்தர சுபீட்சத்துக்காக எழுந்துள்ள அரிதான ஓர் எழுச்சிக் காலத்தில், அந்த மாற்றம் மலர அதில் ஒன்றுபடுவதுதான் எல்லோருக்கும் அவசியமானது.*

*ஆக, அந்த எழுச்சி தொடர்பிலும் சரி அல்லது இப்போது முக்கியமானதாக அமைகின்ற இடைக்கால அரசு தொடர்பிலும் சரி, இந்த நாட்டின் முக்கிய ஓர் அங்கமான தமிழர் தரப்பு தெளிவான ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தவோ அந்த நிலைப்பாட்டுடன் தன்னை ஈடுபடுத்தவோ இயலாத நிலை, தமிழ் அரசியலின் ஒரு 'சூனிய' நிலையை தெளிவாக்குகிறது.*

*அதுமாத்திரமன்றி, முக்கியமான அரசியல் வேளைகளில், தமிழினத்தின் உரிமைகோரும் அல்லது தம்மை அப்படி வெளிப்படுத்தும் அரசியல்வாதிகள் வெளிப்படுத்தும் இனத்தின் கௌரவம் பேணாத வித்திலான கருத்துக்களும் அவற்றை வெளிப்படுத்தும் விதங்களும் சுதந்திர இலங்கையின் தமிழர் அரசியல் வரலாற்றில் அபகீர்த்தியையே ஏற்படுத்துவனவாக அமைவதும் தெரிகிறது.*

*'யுத்தத்தை வென்ற நீங்கள், அதன் பின்னர் இந்த நாட்டின் இனப் பிரச்னைகும் ஒரு தீர்வைக் கண்டிருக்கலாமே. அப்போது, சமாதானத்துக்கான நோபல் பரிசுகூட உங்களுக்கு கிடைத்திருக்குமே' என்று ஒருமுறை மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டபோது, நான் அபிவிருத்தியைத்தான் முன்னுரிமையாக நினைத்தேன் என்றார்.*

*உண்மையில், மஹிந்த என்ன நினைத்தார் என்பது மட்டுமல்ல, ராஜபக்ஷக்கள் எல்லோருமே என்ன நினைத்தார்கள் என்பதையெல்லாம் சிங்கள மக்களும் இப்போது தெளிவாகவே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் வாழும் மக்கள் எல்லோரிடத்துமான இந்த பரஸ்பர புரிதலில், ஒரு புது யுகத்துக்கான விடியல் காலம் நிச்சயமாக இதுவாகவேண்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -29

# அறப் பகிர்வு

கணபதி சர்வானந்தா

“அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்,
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்,
சூழ் வினைச் சிலம்பு காரணமாக,
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டு உடைச் செய்யுள்”

என - அரசியலில் பிழை செய்தவருக்கு அறமே எமனாகித் தண்டனை வழங்கும்.பத்தினியை உயர்ந்தோர் போற்றுவர். ஊழ்வினை வலிமையாக வந்து விளைவினைத் தரும். இந்த உண்மைகளை மையமாக்கி, சிலம்பினைக் காரணமாக வைத்து, ‘சிலப்பதிகாரம்’ என்னும் பெயரில் ‘பாட்டுடைச் செய்யுள்’ ஒன்றை நாம் நிலைபெறச் செய்வோம். என்று இளங்கோவடிகள் கூறினார்- என்ற ஒரு பதிவை இணையத்தில் கண்டேன்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் - அரசியலில் அறத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை எடுத்துச் சொல்வதற்காக இளங்கோ அடிகள் அறம் கூற்றாகும் என்று எடுத்துரைத்திருக்கிறார். சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட உண்மை இது. எனவே, அரசியல் ஒழுக்கம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அரசியலில் ஒழுக்கம் அற்றுப் போகுமாயின் அஃது சமூகத்தில் இருக்கக்கூடிய அத்தனை பண்பாட்டு விழுமியங்களையும் சிதைத்து விடும் என்று இளங்கோ அடிகளார் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

மன்னராட்சி காணப்பட்ட காலகட்டத்தில் இதனை அடிகளார் சொல்லியிருப்பினும் அது இன்றைய நாட்களில் காணப்படும் ஜனநாயக அரசியலுக்கும் பொருந்துகிறது. இதனை அண்மைக்காலமாக இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் என்பது எனது அனுபவக் கருத்து.

முடியாட்சிக்கு மாற்றுத் தீர்வாக ஜனநாயக அரசியல் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அங்கு பல வழிகளிலும் மக்கள் தவறாக வழி நடத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இலஞ்சங்கள், ஊழல்கள், அனைத்திலும் உண்மையற்ற போக்குகள் என ஏகப்பட்ட அதர்ம காரியங்கள் நடந்திருப்பதாக மக்கள் சந்தேகிக்கின்ற அளவுக்கு நிலைமைகள் காணப்பட்டிருக்கின்றன.

அதர்ம காரியங்கள் பல அரங்கேற்றப்பட்டிருப்பதாக ஊடகங்களில் சொல்லப்படுகிறது. அதனை ஒழுக்கமாக எண்ணக் கூடிய அளவுக்கு மக்கள் வழி நடத்தப்பட்டிருப்பதைத்தான் கொடுமை எனலாம். பிழைகளை எல்லாவற்றையும் சரி என்று மக்களை நம்பவைக்கத் தமது அறிவை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அரசில் இருக்கின்ற ஒருவர் தான் சார்ந்த நாட்டைக் காப்பாற்ற எடுக்கும் நடவடிக்கையைத்தான் ராஜ தந்திரம் என்று குறிப்பிடுகிறோம். எனவே அரசியலை ஒரு தந்திரச் செயல் என்று நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். பின்பு அத் தந்திரமானது மேற் சொல்லப்பட்ட அறத்தைப்போல இருக்க வேண்டும் என்பது எந்தவகையில் நியாயமென்று எனக்குத் தெரியவில்லை என்கிறார் ஒரு இலங்கைப் பிரஜை. அத்தகைய இராஜதந்திரத்தின் மூலம் அவர் தன்னை அல்லது தான் சார்ந்தவர்களைக் காப்பாற்ற எடுக்கும் முயற்சியையும் ஏற்பது தானே நியாயம். அதுவே அவர் பால் பட்ட அறம் என்கிறார் அவர். அதனை நாம் ஏற்றுக் கொள்ளலாமா?

அறியாது பசுவின் கன்றினைக் கொன்ற இளவரசனைப் பலிகொடுத்துப் பசுவின் துயர் களைந்த மனு நீதிச் சோழனைப் பற்றிய குறிப்பையும் சிலப்பதிகாரத்திலேயே நாம் பார்க்கிறோம். அறம் என்றால் என்ன? எப்படி அது அரசியலில் பேணப்பட வேண்டும்? என அறத்தைப் பற்றி எடுத்துரைக்கும் கருத்துகள் நிறைந்த சிலப்பதிகாரம் பல் சமயச் சிந்தனைகள் பலவற்றை முன் வைத்து எழுதப்பட்ட ஒரு இலக்கிய வடிவம் என்று சொல்லலாம்.

“அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.. ” என 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாக இளங்கோவடிகள் கூறிச்சென்றதை மீண்டும் ஒரு முறை எண்ணிப் பார்க்கிறேன். 2009 க்குப் பின்னர் அவர் பெயரைச் சொல்ல அச்சப்பட்ட மக்கள் முன்னால் அவர் தலைகுனிந்து நிற்பதென்பது-?

அது தொடர்பானதொரு முகநூல் பதிவில்.. மல வாசலைத் துப்பரவு செய்யப் பயன்படுத்தப்படும் கடதாசிச் சுருளில் அவர்கள் குறியீடான சிவப்பு நிறச் சால்வையை வரைந்த ஒரு கேலிச் சித்திரத்தைப் பதிவிட்ட ஒரு பெண், “அதனை நான் அதற்குக் கூட உபயோகிக்க மாட்டேன். அது எனக்கு அருவருப்பாக இருக்கிறது.” - என எழுதியிருக்கிறாள்.

எனவே அறம் எப்படிக் கூற்றாகிறது என்பதை எடுத்துரைக்கும் வகையில்.... பல பதிவுகள், பல கேலிச் சித்திரங்கள், பல பாடல்கள், பல பரிகாசங்கள். இவை அத்தனையைம் பலர் பகிர்ந்து தமது ஆதங்கத்தை, அந்த ஆட்சியாளர்களில் உள்ள அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அரசியலில் அறம் பற்றிக் குறிப்பிடும்போது அன்றைய அரசியலில் அரச சபையிலே சென்று அரசனிடம் நியாயம் கேட்கும் அளவுக்குத் தர்மம் இருந்திருக்கிறது. அதனாலேதான் கண்ணகி பாண்டிய மன்னனிடம் போய் தன் கணவனுக்கு நீதி கேட்டிருக்கிறாள் என்று ஒருவர் தனது முகநூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே இளங்கோ அடிகளாரின் கூற்று என்பது அன்று மட்டுமல்ல இன்றைக்கும் பொருந்துகிறது. இன்றைக்கும் பொருந்துவதான அறம் கூற்றாகும் என்ற விடயம் என்றும் பொருந்துவதாக... அது அன்றும், இன்றும், என்றும் மாறாததொரு கோட்பாடாகக் கொள்வதன் முக்கியத்துவத்தை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வதன் அவசியத்தை அண்மைக் கால நிகழ்வுகள் தெளிவாகச் சொல்லி இருக்கின்றன. புரிந்து கொண்டால் தர்மம் நிலைக்கும், நாடு செழிக்கும், மக்கள் வளம் பெறுவர்.புரியாது போனால் நாமும் ஒருவகைப்பட்ட சோமாலியர்களாக ஆவோம் என்பதே அறம்.

---

# இந்தவார ராசிபலன் 15.05.2022 - 21.05.2022

மே 15 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 01

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சூன்ய

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உங்கள் செயல்களில் முன்னேற்றம் இருக்கும், அதன்பிறகு நெருக்கடிகளால் சில சங்கடங்களை சந்திக்க வேண்டிவரும். எச்சரிக்கையுடன் செயல்பட நன்மை உண்டாகும். குடும்பத்தினர் வழியே செலவுகள் அதிகரிக்கும். இடம், வீடு வாங்குதல் பற்றிய சிந்தனை மேலோங்கும். வார இறுதியில் அலைச்சலும் உழைப்பும் அதிகரிக்கும். உங்கள் நேர்மையான செயல்களில் நன்மைகளைக் காண்பீர்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உத்தியோகத்தில் உயர்வும் செல்வாக்கும் அதிகரிக்கும், பிள்ளைகளின் வழியில் நன்மைகள் உண்டாகும். எதிர்ப்புகள் விலகும். திட்டமிட்டு செயல்படும் செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.நினைத்தவற்றை அடையும் முயற்சியில் போராடி வெற்றி பெறுவீர்கள். தொழிலில் இருந்த தடைகள் விலகும். லாபத்திற்குரிய வழிகள் தோன்றும். நண்பர்களால் ஆதாயம் காண்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடத்துவீர்கள். எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டாகும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் கல்வி குறித்து தீர்மானிப்பீர்கள். தடைபட்டிருந்த வரவுகள் வரப்பெற்று நினைத்ததை சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் தேவைப்படும்.முயற்சிகளின் வழியே முன்னேற்றம் காண்பீர்கள். புதிய முயற்சிகளினால் செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் போட்டிகள் உண்டானாலும் அதை சமாளித்து வெற்றி பெறுவீர்கள். கடும் முயற்சிகளால் எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவீர்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

மனதில் இருந்த குழப்பங்கள் விலகும், சரியான திட்டங்கள் தீட்டி அதன் வழியே செல்வீர்கள். சகோதர வகையில் ஆதரவு உண்டாகும். தொழில் விவகாரங்களில் புதிய நபர்களின் ஆலோசனைகள் வேண்டாம். பெரியவர்களின் ஆதரவால் நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.துணிச்சலுடன் செயல்பட்டு உங்கள் முயற்சிகளில் ஆதாயம் காண்பீர்கள். தாய்வழி உறவுகளால் நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். புதிய இடம், வீடு வாங்கும் முயற்சி வெற்றியாகும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த பணம் உங்கள் கைக்கு வருவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் அனுகூலம் காண்பீர்கள். எதிரிகளால் உண்டான சங்கடங்கள் விலகும். அவசரப்பட்டு எந்தவொரு செயலிலும் இறங்க வேண்டாம்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

வாக்கில் நிதானம் வேண்டும். உங்கள் பேச்சுகளால் தேவையற்ற சங்கடங்கள் உருவாக வாய்ப்புண்டு. எதிர்பார்த்த செயல்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்ப்புகளை சமாளித்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் வருவாய் அதிகரிக்கும். கடன்களால் உண்டான நெருக்கடிகள் விலகும். ஆரோக்கியம் சீராகும். புதிய திட்டங்கள் தீட்டி அதை செயல்படுத்தி வெற்றி காண்பீர்கள்.எச்சரிக்கை தேவைப்படும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

மனதில் தேவையற்ற குழப்பங்கள் வந்து போகும். நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக மாறும். குடும்பத்தின் தேவைகள் அதிகரித்து பணம் பல வழிகளிலும் செலவாகி நெருக்கடியை உண்டாக்கும். நட்புகளால் சங்கடங்கள் தோன்றும்.அலைச்சல் அதிகரிக்கும். தாயாரின் உடல்நிலையில் பாதிப்பு உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் தலைதூக்கும். செலவுகளால் மனம் சங்கடத்தில் மூழ்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தடைபட்டிருந்த வருவாய் உங்கள் கைக்கு வரும். இதுவரையில் உண்டாகி இருந்த பிரச்சனைகள் முடிவிற்கு வரும். திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் ஆதாயம் அதிகரித்து சொத்து சேர்க்கை உண்டாகும். புதிய சொத்து சேர்க்கை உண்டாகி மகிழ்வீர்கள். தொழிலில் புதிய அனுகுமுறைகளைக் கையாண்டு முன்னேற்றம் காண்பீர்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

குடும்பத்தில் நெருக்கடிகள் நீடித்தாலும் உங்கள் செலவிற்கேற்ப வருவாய் வரும். அலைச்சல் அதிகரித்தும் முயற்சிக்கேற்ற ஆதாயம் இல்லாமல் போனாலும் எதையும் துணிச்சலாக செய்து நினைத்த இடத்தை அடைய முயல்வீர்கள்.முயற்சிகளால் முன்னேற்றம் காண்பீர்கள். லாபம் அதிகரிக்கும். உறவினர்களின் வருகையுடன் அவர்களால் ஆதாயமும் உண்டாகும். உங்கள் முன்பாக இருந்த தடைகள் அகலும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பிரச்சனைகளில் இருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றும் அளவிற்கு வரவுகள் உண்டாகும். சந்தோஷமான விஷயங்களில் மனம் செல்லும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும்.நெருக்கடிகளை எல்லாம் உங்கள் முயற்சிகளால் சரி செய்வீர்கள். வாழ்க்கைத்துணையின் வழியே மன உளைச்சல் அதிகரிக்கும். நட்புகளுடன் இருந்த நெருக்கம் இல்லாமல் போகும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


அவசரப்பட்டு செயல்படும் காரியங்கள் சங்கடத்தை உண்டாக்கும். தந்தை வழியில் நெருக்கடிகள் நீடிக்கும் என்றாலும் அவற்றையெல்லாம் சரிசெய்வீர்கள்.வாரத்தின் பிற்பகுதியில் எதிர்ப்புகளால் சங்கடப்படுவீர்கள். செலவுகள் பல வழியிலும் உண்டாகி சிரமத்தை உண்டாக்கினாலும் நீங்கள் நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். எதிர்பார்த்த வரவுகளால் நிலைமைகளை சரி செய்வீர்கள்.குடும்பத்தில் நிம்மதியான நிலை உண்டாகும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

புதிய முயற்சிகள் வெற்றியாகும். வேலை நிமித்தமாக ஊர்விட்டு ஊர்செல்வீர்கள். திருமண முயற்சி வெற்றியாகும். குடும்பத்தினருடன் சங்கடங்கள் தோன்றி மறையும்.அலைச்சல் அதிகரிக்கும், தேவையற்ற செலவுகளால் குழம்பித்தவிப்பீர்கள். பிள்ளைகளின் நலனுக்காக சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள். தந்தை வழியில் நன்மைகள் உண்டாகும். உங்கள் வார்த்தைகளால் சில சங்கடங்களை அடைவீர்கள். வேலை நிமித்தமாக அலைச்சல் அதிகரிக்கும். புதிய சொத்து வாங்கும் முயற்சி வெற்றியாகும். குடும்பத்திற்குள் குழப்பங்கள் உண்டாகலாம் என்பதால் நிதானம் அவசியம்.

# இந்தியா மற்றும் மேலை நாடுகளின் விருப்பப் பிரதிநிதி ரணில்!

சென்னை மடல்
-பகவான் சிங்-



களத்தில் நின்று ஒரு நிகழ்வை பார்ப்பதை விட, தள்ளியிருந்து பார்வையாளர்களின் கலரியில் அதை கவனிப்பதே சிறந்தது என்பது ஒரு பத்திரிகையாளராக என் நம்பிக்கை. நடப்பவை எல்லாவற்றையும் ஒரு பறவைக்கோணத்திலிருந்து உங்களால் பார்க்க முடியும். அதனால் களத்தில் என்ன நடக்கிறது என்பதை ஆராய்வதும், எங்கே தவறு நடந்தது, அதை எப்படி சரி செய்யலாம் என்று புரிந்துகொள்வதும்கூட எளிது. அதைத் தவிர, இதுபோன்ற பல போட்டிகளை நீங்கள் ஏற்கனவே பார்த்திருக்கிறீர்கள் என்பதால், இப்போது இது ஏன் நடக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

வியாழனன்று அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவால் பதவிப்பிரமாணம் அளிக்கப்பட்டு, 225 உறுப்பினர்களைக்கொண்ட இலங்கை பாராளுமன்றத்தில் தனி உறுப்பினரான ரணில் விக்கிரமசிங்க பிரதமரானபோது, இவர் எங்கிருந்து வந்தார் என்று தோன்றியது. ஆறாவது முறையாக பிரதம மந்திரியாகப் பதவியேற்றிருக்கும் 73 வயது ரணில், 1948ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை கிடைத்ததிலிருந்து இப்போதுவரை இலங்கை கண்டிராத ஒரு பெரிய பிரச்னையிலிருந்து நாட்டை விடுவிக்கும் ஒரு கட்டாயம் இருக்கிறது. உலகின் மிகவும் புத்திசாலித்தனமான அரசியல் வல்லுநருக்கே இது ஒரு பெரிய சவாலாக இருக்கும் என்பது நமக்குத் தெரியும். நிதியமைச்சராக இருந்த அலி சப்ரி, இலங்கையின் பொருளாதாரம் மீண்டு வருவதற்குக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது ஆகும் என்று கூறியுள்ளார். ஏற்கனவே கோவிட் பரவலாலும் ராஜபக்ஷ

குடும்பத்தினரின் ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேட்டினாலும் பொருளாதாரம் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே கீழ்நோக்கி சரிந்துகொண்டிருப்பதை அனைவரும் கவனித்திருக்கிறோம்.

ரணிலின் பிரச்னைகள் நீண்டகாலம் மற்றும் குறுகிய காலத்தன்மை கொண்டவை. அவருக்கு இருக்கும் உடனடிப் பிரச்னை, ஒரு பிரதமராக அந்த நாற்காலியில் தன்னை நிலைநிறுத்திக்கொள்வது. காலிமுக திடலில் “கோட்டாவே வெளியேறு” என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கும் போராட்டக்காரர்கள் அவரை ராஜபக்ஷவின் பிரதிநிதியாகப் பார்க்கிறார்கள். ஒருவேளை, அதிபர் பதவியிலிருந்து கோட்டாபயவை அவர்கள் வெற்றிகரமாக வெளியேற்றிவிட்டால், அடுத்ததாக கோட்டாவால் பரிந்துரைக்கப்பட்ட ரணிலை நோக்கி அவர்களின் கோபம் திரும்பக்கூடும். மே 17ஆம் திகதி கோட்டாபயவின்மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடக்கப்போகிறது. அதன்பிறகு ரணிலின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு வரும்போது எப்படியாவது 113 உறுப்பினர்களின் பெரும்பான்மையை ரணில் பெற்றுவிட்டால் இந்த நிலை தடுக்கப்படக்கூடும்.

கோட்டாவுக்கு எதிரான நம்பிக்கை வாக்கெடுப்பு, ஓர் அதிபராக அவரது செயல்பாடுகளுக்கு எதிரான அதிருப்தியை வெளிப்படுத்தும் தீர்மானம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதுபோலத் தெரிகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், ஒருவேளை இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அவர் இராஜினாமா செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை, ஆனால், தார்மீக ரீதியாகப் பதவி விலகவேண்டிய நெருக்கடி கோட்டாவுக்கு ஏற்படலாம்.

கலரியில் இருந்து பார்க்கும் எனக்கு இப்படி ஒரு காட்சிதான் தெரிகிறது. இந்தியா மற்றும் மேலை நாடுகளின் விருப்பப் பிரதிநிதியாக ரணில் இருக்கிறார் என்பது ஒரு விஷயம். பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதற்காக வரப்போகும் பணத்தை சரியாக செலவழிக்க சரியான ஆள் என்பதை அவர்கள் நம்புகிறார்கள். அவரது நிர்வாகத்திறன் மற்றும் அனுபவத்தின்மீது பிற நாடுகளுக்கு நம்பிக்கை இருக்கிறது. சொல்லப்போனால், “கோட்டாவே வெளியேறு” போராட்டம், அவரது சகோதரர் மஹிந்தவின் வெளியேற்றம் ஆகியவை அனைத்துமே, வர இருந்த மிகப்பெரிய பொருளாதார மற்றும் சமூக-அரசியல் சரிவிலிருந்து இலங்கையை மீட்பதற்காகவும், சீனாவின் பிடி இறுகாமல் இலங்கையைக் காப்பதற்காகவும் இந்த “அயல்” சக்திகள் நடத்திய செயல்பாடு என்றே நான் நினைக்கிறேன். அதேபோல, அரசியல் ரீதியாகக் கொஞ்சம் அமைதி வந்தால்தான் பொருளாதார மீட்டெடுப்பு நடக்கும் என்பதால், அதுவரை ரணில் பதவியில் நீடிப்பதற்குத் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் இந்த அயல் சக்திகள் செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.

சென்னையில் எனது மேசையில் அமர்ந்து சனிக்கிழமை காலை இதை எழுதும்போது, தன் தலைமையில் ஓர் ஒற்றுமை அரசை உருவாக்க ரணில் மிகவும் சிரமப்படுகிறார் என்ற செய்தி கொழும்பிலிருந்து வந்தது. கிட்டத்தட்ட எல்லா எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரவையில் இணைய மறுத்துவிட்டதாகவும், நாட்டைக் காப்பாற் றும் முயற்சிகளில் தன்னுடன் இணையுமாறு வேண்டுகோள் விடுத்து எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ரணில் கடிதம் எழுதியுள்ளார் என்றும், மூத்த தலைவர்களில் பலர், தலைமையின் நம்பகத்தன்மை போதுமானதாக இல்லை என்று கூறியிருப்பதாகவும் தெரிகிறது. ரணில் கோரிக்கை விடுத்தும் ஹர்ஷா டி சில்வா நிதியமைச்சர் பொறுப்பை மறுத்திருக்கிறார். கோட்டாபய அதிபராக இருக்கும்போது எந்த ஓர் அரசியல் பொறுப்பிலும் இருக்க வேண்டாம் என்று அதை நிராகரித்ததாகக் கூறும் அவர், இப்போது கோட்டாவே வெளியேறு புரட்சியில் கலந்துகொள்வதாகவும் அறிவித்திருக்கிறார். சஜித் பிரேமதாச, காலி முக திடலில் உள்ள கூடாரங்களுக்கு சென்றிருக்கிறார். பிரதமர் பதவியை இராஜினாமா செய்து மஹிந்த வெளியேறுவதற்கு சில மணிநேரங்கள் முன்பாக அவரால் அனுப்பப்பட்ட குண்டர்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்டதாக சொல் லப்படும் போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித் திருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் போராட்டக்காரர்களை சந்தித்ததுபோலவே, தங்களுடைய உயர்ந்த சிம்மாசனங்

## ‘சுரங்கத்தின் முடிவிலுள்ள வெளிச்சம் அல்ல, வந்துகொண்டிருக்கும் ரயிலின் வெளிச்சம்’ - சுமந்திரனுக்கு ஏன் தோல்வி மனப்பாங்கு?



களில் அமர்ந்துகொண்டு பத்திரிகையாளர் சந்திப்பில் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த்தலைவர்களும் காலிமுக போராட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்று கெஞ்சிக்கொண்டிருக்கிறேன். புரட்சி வெற்றிபெறும்போது அதில் பங்குபெறவேண்டுமானால், ஒருமித்த ஆதரவு தரப்படவேண்டும் என்றும் கூறினேன். கறுப்பான மேகங்களுக்கு நடுவில் ஒரு சிறு ஒளியாக வெற்றி வரத் தொடங்கிவிட்டது என்று நினைக்கிறேன்.

வெள்ளிக்கிழமையன்று வெளியான டெல்லியைச் சேர்ந்த ஆங்கில ஊடகமான “த ப்ரிண்ட்“க்கு தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த சுமந்திரன் ஒரு பேட்டி அளித்திருக்கிறார். பாராட்டுக்குரிய அந்தப் பேட்டி விரிவாகவும் தெளிவாகவும் இருக்கிறது, பல சமயங்களில் வெளிப்படையாகவும் அவர் பேசியிருக்கிறார். எனதருமை “ஈழநாடு” வாசகர்கள் அதைப் படிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்தப் பேட்டியில் “இது ஒரு சுரங்கத்தின் முடிவிலுள்ள வெளிச்சம் அல்ல, வந்துகொண்டிருக்கும் ரயிலின் வெளிச்சம்” என்று ஓர் உதாரணத்தை சொல்லியிருக்கிறார். இந்த தோல்வி மனப்பான்மை ஏன் என்று தெரியவில்லை.

அந்தப் பேட்டியில், காலிமுக போராட்டக்காரர்களிடமிருந்து மிகவும் நேர்மறையான, நல்ல எண்ணங்களைப் பார்த்ததாக சுமந்திரன் கூறுகிறார். தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை மற்றும் குற்றங்களைக் குறிப்பிட்டு, அவற்றை ஒப்புக்கொள்ளும் பதாகைகளை ஏந்தியிருந்த போராட்டக்காரர்கள், இந்த நிலைமையை மாற்றுவதற்கான உறுதிமொழியை ஏற்றிருப்பதாகவும் முழக்கமிட்டிருக்கின்றனர்.

“அரசியல்வாதிகள் இதுவரை மக்களை தவறான பாதையில் இட்டுச் சென்றிருக்கிறார்கள். இப்போது மக்களே முன்வந்து தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தியிருப்பதால் ஒரு நம்பிக்கையின் கீற்று தெரிகிறது. வேற்றுமைகளைக் கைவிடும் நேரம் இது” என்று சுமந்திரன் கூறுகிறார். இவர் குறிப்பிடும் அரசியல்வாதி கள் என்ற வகையில் சுமந்திரன் உள்ளிட்ட யாழ் தலைவர்களும் உண்டு என்பதால், இதுவரை “கோட்டாவே வெளியேறு” கோஷம் நிறைந்த காலிமுக திடல் போராட்டத்தை இவர்களெல்லாம் ஏன் தவிர்த்தார்கள் என்ற கேள்வியைக் கேட்க விரும்புகி றேன். பல ஆண்டுகளாகவே மின்வெட்டு மற்றும் தட்டுப்பாடுகளோடு வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்கள் போராடிக்கொண்டிருக்கும் நிலையில், சில வாரங்கள் கஷ்டப்பட்டதற்கே சிங்களவர்கள் பதட்டத் துடன் இருந்தமை யாழ் மக்களுக்கு நகைச்சுவையாக இருந்தது என்று சுமந்திரன் தனது பேட்டியில் கூறுகிறார்.

மஹிந்தாவை வெளியேற்றிவிட்டு ரணிலை அங்கே அமரவைத்து சர்வதேச நிதியகமான IMF முன்வைக்கும் பொருளாதார மீட்டெடுப்பு செயல்பாடுகளைத் தொடங்குவது, “அதிருப்தி தீர்மானத்தின்” மூலம் கோட்டாபயவை வெளியேற்றுவது, பாராளுமன்றத்தின் வாக்குக்குத் தேவையான பெரும்பான்மையை ரணிலுக் குப் பெற்றுத்தருவது ஆகியவை இந்தியா மற்றும் மேலை நாடுகளின் திட்டமாக இருக்கக் கூடும். புதிய ஜனாதிபதியை பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கும்வரை தற்காலிக அதிபராக இருப்பதற்கான உரிமையை இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் அளிப்பதாக சுமந்திரன் தனது பேட்டியில் கூறியிருக்கிறார். பிறகு காலிமுக போரட்டம் அமைதியான வகையில் முடிவுக்கு வரும். ஆனால் அப்படி நடக்குமா? ஏற்கனவே கோட்டாபயவின் வெளியேற்றம் மட்டுமல்லாமல், பல கோரிக்கைகளும் இருப்பதாகப் போராட்டக் காரர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

கோட்டாபயவின் உடனடி இராஜினா மாவைத் தவிர அவர்கள் வைக்கும் முக்கிய கோரிக்கை இது. உடனடியாக பாராளுமன்ற சபாநாய கர் அரசியல் கட்சித் தலைவர்களோடு ஒரு கலந்துரை யாடல் நடத்தி, மீட்டெடுப்பு, அரசியல் - சமூக - பொருளாதார நிலைத்தன்மை ஆகியவற்றை நோக்கி இலங்கையை வழிநடத்தக்கூடிய ஓர் இடைக்கால அரசு கொண்டுவரப்படவேண்டும். தன்னுடைய அமைச்சரவை உறுப்பினர்களோடு இதற்குப் பிரதமர் தலைமை வகிக்கவேண்டும். உடனடியாகத் தேர்தல் வேண்டும் என்று வற்புறுத்தும் எதிர்கட்சித் தலைவர்களுக்கு இந்த இளைஞர்களின் பாடம் புரியும் என்று நான் நம்புகிறேன். ரொட்டியும் எரிவாயுவும் இல்லாத சூழலில் பல கோடி செலவில் எப்படி தேர்தல் நடத்த முடியும்? பணம் எங்கிருந்து வரும்?

“அரசியலமைப்புச் சட்டத்தில் புதிய சீர்திருத்தங்கள் வரும்வரை இந்தப் போராட்டம் தொடரும் என்று நினைக்கிறேன். 21ஆம் சட்டத்திருத்தத்தின்படி அதிபரின் அதிகாரங்களை நீக்குவது முதல் பல சீர்திருத்தங்கள் தேவை. ஆனால், ஒரு போராட்டத்தை நீண்ட காலம் நிலைநிறுத்துவது எளிதல்ல” என்றார் தந்தை செல்வாவின் பேரனான சா.செ.ச.இளங்கோவன்.

“செவ்வாய்க்கிழமையன்று பாராளுமன்றத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்போது, போராட்டக்காரர்கள் அங்கே நகர வாய்ப்பிருக்கிறது. அடுத்தடுத்த நாட்களில் என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்” என்றார் இளங்கோவன் சந்திரஹாசன்.

ஆகவே நண்பர்களே, பல நிகழ்வுகள் அடுத்தடுத்த நாட்களில் நடக்கப்போகின்றன. தயாராக இருங்கள். மீண்டும் சந்திப்போம், வணக்கம்.

# மகிந்த ராஜபக்சவின் வீழ்ச்சியின் பாடங்கள்



வீரகத்தி
தனபாலசிங்கம்

**ராஜபக்சாக்கள் இலங்கையின் காயப்பட்ட ஜனநாயகம், குடும்ப ஆதிக்கத்துடன் கூடிய எதேச்சாதிகாரம், சிறிய குழுவினரின் ஆட்சி மற்றும் அரசியல் ஊழல் ஆகியவற்றின் படுமோசமான மரபுகளில் ஒன்றின் சின்னமாக விளங்குகிறார்கள்.**



அண்மைக்கால இலங்கையின் வரலாற்றில் சிங்கள மக்களின் அமோக ஆதரவைக் கொண்ட பெரும் அரசியல் தலைவர் என்று கருதப்பட்டவர் மகிந்த ராஜபக்ச. நவயுக மன்னராகவும் கூட அவர் வர்ணிக்கப்பட்டு பாடல்களும் இசைக்கப்பட்டன. இன்று அவர் வெகுஜனக் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாமல் கடந்தவாரம் பிரதமர் பதவியில் இருந்து இறங்கி அலரிமாளிகையில் இருந்து வெளியேறி பாதுகாப்புக்காக குடும்பத்தினருடன் திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தில் தஞ்சம் புகுந்திருக்கிறார். நாட்டின் கொந்தளிப்பான நிலைவரங்கள் தணிந்த பின்னர் அவர் விரும்புகின்ற இடத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று பாதுகாப்பு செயலாளர் அறிவித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் 69 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வந்த கோட்டாபய ராஜபக்சவும் 2020 ஆகஸ்ட் பொதுத் தேர்தலில் 68 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப்பெற்ற சிறி லங்கா பொதுஜன பெரமுன பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியதையடுத்து பிரதமராக பதவிக்கு வந்த மகிந்த ராஜபக்சவும் ஒரு 30 மாத காலத்திற்குள் மக்களினால் வெறுக்கப்பட்டு பதவிகளில் இருந்து இறங்குமாறு கேட்கப்படுவார்கள் என்று எவராவது கனவிலும் நினைத்துப் பார்த்திருப்பார்களா? ராஜபக்ச குடும்பத்தின் எந்தவொரு உறுப்பினரும் பொறுப்பான பதவிகளில் இருக்கக்கூடாது. ஒட்டு மொத்தமாக அவர்கள் வீடு செல்ல வேண்டும் என்று நாட்டு மக்கள் கேட்கின்ற அளவுக்கு அவர்கள் மீதான வெறுப்பு உச்ச நிலையை அடைந்திருந்தது.

ராஜபக்சாக்களுக்கு எதிராக பேசுவதற்கே மக்கள் அஞ்சிய காலம் போய் ஆர்ப்பாட்டக்காரர்கள் இன்று அவர்களின் வீடுகளையும் சொத்துக்களையும் தேடித்தேடி தீவைக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அம்பாந்தோட்டையில் ராஜபக்சாக்களின் பூர்வீக இல்லம் சாம்பலாக்கப்பட்டிருக்கிறது. தந்தையார் டி.ஏ. ராஜபக்சவின் பிரமாண்டமான உருவச்சிலை தகர்த்துவீழ்த்தப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி கோட்டாபயவைத் தவிர மற்றைய ராஜபக்சாக்கள் எல்லோரும் பதவிகளில் இருந்து இறங்கி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுவிட்டார்கள். மே 9 ஆம் திகதி நண்பகல் அலரிமாளிகையில் இருந்து கிளம்பிய ராஜபக்ச ஆதரவாளர்கள் (அரசாங்க அனுசரணையுடன் கொழும்புக்கு வெளியில் இருந்து பஸ்களில் கூட்டி வரப்பட்ட காடையர்கள்) கொழும்பு காலிமுகத்திடலில் " கோட்டா கோகம" அமைதி வழிப் போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கும் நிலையில் மகிந்த ராஜபக்சவும் மூத்த புதல்வன் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்சவும் நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. தங்கள் தேவைக்கு நீதித் துறையை வளைத்துப்போட்டவர்களுக்கு இன்று இந்த அவலநிலை.





தென்னிலங்கை அம்பாந்தோட்டையில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்த ராஜ பக்ச குடும்பத்தின் மூத்த உறுப்பி னர்கள் கடந்த நூற்றாண்டின் முற்பகுதி யில் இருந்து அரசியலில் ஈடுபட்டு வந்திருந்தாலும் அண்மைய பல தசாப்தங்களில் அந்த குடும்பத்தின் பிரபலமான "அரசியல் முகமாக" விளங்கியவர் மகிந்த ராஜபக்சவே.

1970 பொதுத்தேர்தலில் சிறிமா வோவின் சிறிலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி மாபெரும் வெற்றியைப் பெற்ற போது பெலியத்த தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்கு தனது 24 வயதில் தெரிவானவர் மகிந்த ராஜபக்ச.

1977 ஜூலை பாராளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திர கட்சி ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியிடம் படுதோல்வியடைந்த போது மகிந்தவும் பெலியத்தவில் தோல்வியைத் தழுவினார். தொடர்ந்தும் அரசியலில் துடிப்பாக இயங்கிய அவர் பிறகு 1989 பெப்ரவரியில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சியில் முதற்தடவையாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அம்பாந்தோட்டையில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவானார். அவரின் மூத்த சகோதரர் சமால் ராஜபக்சவும் முதற்தடவையாக அப் போது பாராளுமன்றம் வந்தார்.

பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் ஜனதா விமுக்தி பெர முன (ஜே.வி.பி.) வின் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி கொடூரமான முறையில் படைபலம் கொண்டு அடக்கப் பட்டபோது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்த மகிந்த ராஜபக்ச ஜெனீவாவுக கும் சென்று முறையிட வும் செய்தார். பின்னர் அவரின் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டங்களில் இடம்பெற்ற மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான உரிமைகள் மீறல்கள் முறைப்பாடுகள் தொடர்பிலான ஜெனீவா தீர்மானங்களை எவ்வாறு கையாண்டு வந்தார் என்பது அண்மைக்கால வரலாறு.

1994 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் சுதந்திர கட்சி தலைமையிலான பொதுஜன முன்னணியின் வேட்பாளரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெற்றிபெற்று ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அவரது அரசாங்கத்தில் அமைச்சராக மகிந்த பதவி வகித்தார். அவருக்கு மிகவும் முக்கியமான அமைச்சுப்பொறுப்புக்களை வழங்காதிருப்பதில் திருமதி குமாரதுங்க மிகவும் எச்சரிக்கையாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலத்தின் பிற்பகுதியில் மகிந்த பிரதமராகவும் சில வருடங்கள் பதவிவகித்தார். 2001 டிசம்பர் பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்த போது மகிந்த பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராகவும் இருந்தார். 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலை அவர் பிரதமர் பதவியை வகித்துவந்த நிலையிலேயே எதிர்கொண்டார். சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக போட்டியிட்ட அவர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்தார்.

அந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவோ அல்லது விக்கிரமசிங்கவோ நாட்டு மக்களின் குறிப்பாக தென்னிலங்கை மக்களின் அமோக ஆதரவைக் கொண்ட வேட்பாளர்களாக இருக்கவில்லை. விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விடு தலை புலிகளுடன் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் இனவாத அடிப்படையிலான பிரசாரங்களை முன்னெடுத்த காரணத்தால் மகிந்த ராஜபக்ச விக்கிரமசிங்கவையும் விட சற்று கூடுதலான செல்வாக்கைக் கொண்டவராக விளங்கியிருக்கக்கூடும்.

வடக்கு தமிழ் மக்கள் அந்த ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக மகிந்த ராஜபக்ச வெற்றிபெற்றிருக்கவே முடியாது. அவர் 28 ஆயிரம் வாக்குகளை குறைவாக பெற்றிருந்தால் ஜனாதிபதியாக தெரிவாவதற்கு தேவையான 50 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகள் என்ற எல்லையை கடந்திருக்கமாட்டார் என்பதே உண்மை.(09 ஆம் பக்கம் பார்க்க..)

# மகிந்த ராஜபக்சவின்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)
மகிந்தவின் முதலாவது பதவிக் காலத்தில் 2009 ஆண்டில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.போர்வெற்றியை உச்ச அளவுக்கு தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்தியே ராஜபக்சாக்கள் தங்களது அடுத்த கட்ட அரசியலை முன்னெடுத்தார்கள்.

போரின் முடிவுக்குப் பிறகு சிறுபான்மை இனங்களை அரவணைக்கின்ற கொள்கைகளையும் நடைமுறைகளையும் கடைப்பிடித்து, உள்நாட்டுப் போருக்கான காரணிகளை சிங்கள மக்களுக்கு புரியவைத்து அவர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து தேசிய இனப்பிரச்சி னைக்கு நிலையான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கும் அதன் மூலமாக நாட்டின் வளமான எதிர்காலத்தை மனதிற் கொண்ட சிறந்த அரசியல் தலைவர் என்ற பெருமையை தனதாக்கிக்கொள்வதற்கும் வரலாறு மகிந்தவுக்கு அருமையான வாய்ப்பொன்றை வழங்கியிருந்தது. ஆனால், அவர் அதை வேண்டுமென்றே தவறவிட்டார்.

போர்வெற்றி எக்காளத்தில் சிங்கள மக்களை மிதக்கவிட்டு, இராணுவவாதத்துடன் கூடிய சிங்கள பௌத்த பெரும்பான்மையின வாதக் கொள்கைகளை வீறுடன் முன்னெடுப்பதிலேயே ராஜபக்சாக்கள் தீவிர கவனம் செலுத்தினார்கள். ஆட்சிமுறையினதும் கட்சி அமைப்புக்களினதும் சகல பிரிவுகளுக்கும் தங்கள் கொடுக்குகளைப் பரவி வைத்தார்கள். அதன் விளைவுகளை இன்று முழு நாடும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

இலங்கை அதன் சுதந்திரத்துக்கு பின்னரான வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் படுமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கும் மருந்து வகைகளுக்கும் எரிபொருட்களுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. வாழ்க்கைச் செலவு கூரையைப் பிரித்துக்கொண்டு வானளாவ அன்றாடம் உயர்ந்துகொண்டே செல்கிறது. ஒரு நாளைக்கு ஒரு விலை கொடுத்தே மக்கள் பொருட்களை வாங்கவேண்டியிருக்கிறது. பணவீக்கம் கடுமையாக அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வெளிநாட்டுக்கடனை திருப்பிச் செலுத்த முடியாதநிலையில் நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலை அடைந்திருக்கிறது. வெளிநாட்டு உதவித் தயவிலேயே இலங்கையின் அன்றாட வாழ்க்கையை இலங்கை ஓட்டவேண்டிய பரிதாபமான நிலை.

இத்தகைய இடர்நிலைக்கு ராஜபக்சாக்களின் குடும்ப ஆட்சியின் ஊழல் மோசடிகளும் அதிகார துஷ்பிரயோகமும் தவறான பொருளாதார முகாமைத்துவமுமே அடிப்படைக் காரணம் என்பதை விளங்கிக்கொண்ட மக்கள் கடந்த பல வாரங்களாக வீதிப் போராட்டங்களில் இறங்கியிருக்கின்றார்கள்.ராஜபக்சாக்கள் அரசியலுக்கு இனிமேல் வரக்கூடாது என்று கோஷங்களை எழுப்புகிறார்கள். நாட்டைச் சூறையாடிய அவர்களின் சொதத்துக்களை பறிமுதல் செய்யவேண்டும் என்ற முழக்கங்கள் போராட்டங்களில் ஒலிக்கின்றன.

சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனைகளில் சாதாரண மக்களை மூழ்க வைத்துவிட்டு ராஜபக்சாக்கள் தங்களை வளப்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சொத்துக்களை வாங்கிக்குவித்து வைத்திருக்கிறார்கள் என்று பரவலான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.




இலங்கை அரசியல் ராஜபக்சாக்களின் காலத்தில்தான் குடும்ப ஆட்சியுடன் அடையாளப்படுத்தப்படுகிறது என்றில்லை. முன்னரும் கூட அரசியல் முக்கியமான நிலப்பிரபுத்துவ --முதலாளித்துவ குடும்பங்களின் செல்வாக்கின் கீழ் இருந்து வந்திருக்கிறது.சேனநாயக்க, பண்டாரநாயக்க குடும்பங்களை உதாரணமாகக் கூறலாம். ஐக்கிய தேசிய கட்சி ஒரு காலத்தில் மாமன் --மருமகன் கட்சி என்றே அழைக்கப்பட்டது. சுதந்திர கட்சிக்குள் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதிவரை பண்டாரநாயக்க குடும்பத்தவரைத் தவிர்ந்த வேறு எவரும் தலைமைத்துவத்துக்கு வருவது குறித்து நினைத்துப்பார்க்கவே முடியாது. ஆனால், அந்தக் குடும்பங்கள் ராஜபக்சாக்கள் அளவுக்கு மக்களால் வெறுக்கப்படவில்லை. இவர்கள் அளவுக்கு ஊழல் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம், பொதுச்சொத்துக்கள் சூறையாடல் ஆகியவற்றுடன் அந்தக் குடும்பங்கள் அடையாளப்படுத்தப்படவில்லை. அத்துடன் ராஜபக்ச குடும்பத்தின் உறுப்பினர்களும் உறவினர்களும் அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்களும் பெரும் எண்ணிக்கையில் ஆட்சி நிருவாகத்தில் ஆக்கிரமிப்பு செய்தது போன்று அந்த குடும்பங்கள் நடந்து கொள்ளவில்லை.

இலங்கையின் சிறந்த அரசியல் ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றில் இன்றைய மக்கள் போராட்டங்கள் குறித்து எழுதிய கட்டுரையொன்றில் ராஜபக்சாக்கள் பற்றி செய்த விமர்சனத்தின் ஒரு பந்தியை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

"ராஜபக்சாக்கள் இலங்கையின் காயப்பட்ட ஜனநாயகம், குடும்ப ஆதிக்கத்துடன் கூடிய எதேச்சாதிகாரம், சிறிய குழுவினரின் ஆட்சி மற்றும் அரசியல் ஊழல் ஆகியவற்றின் படுமோசமான மரபுகளில் ஒன்றின் சின்னமாக விளங்குகிறார்கள். இலங்கை ஜனநாயகம், கட்சி அரசியல், பாராளுமன்ற செயன்முறைகள் மற்றும் சமூக அமைதி ஆகியவை மீதான ராஜபக்சாக்களின் பாதகமான செல்வாக்கு படுமோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

**இலங்கை ஜனநாயகம், கட்சி அரசியல், பாராளுமன்ற செயன்முறைகள் மற்றும் சமூக அமைதி ஆகியவை மீதான ராஜபக்சாக்களின் பாதகமான செல்வாக்கு படுமோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.**

ராஜபக்சாக்கள் ஜனவசிய அரசியலை (Populist politics) முன்னெடுப்பவர்கள் போன்று வெளித்தோற்றத்துக்கு ஒரு மாயையைக் காட்டிக் கொண்டு அடிப்படையில் அதிகார வெறி பிடித்தவர்களாகவே செயற்பட்டு வந்திருக்கிறார்கள்.அதிகார மமதை அவர்கள் சகலரிடமும் குடிகொண்டிருந்தது.

மகிந்த ராஜபக்ச தனது இரண்டாவது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் அரசியலமைப்புக்கான 18 வது திருத்தத்தைக் கொண்டுவந்து ஜனாதிபதி ஒருவருக்கு இருந்த இரு பதவிக்கால வரையறைகளை ஒழித்தார். எத்தனை பதவிக்காலத்துக்கும் தேர்தலில் தான் போட்டியிட்டு தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கு விரும்பினார். இரண்டாவது




பதவிக்காலத்தில் இரு வருடங்கள் எஞ்சியிருந்த நிலையில் 2015 ஜனவரியில் உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை அவர் நடத்தினார். ஆனால், தனது அமைச்சர்களில் ஒருவரிடம் தான் அந்த தேர்தலில் தோல்வியடையவேண்டிவரும் என்று அவர் ஒருபோதும் நினைத்திருக்கமாட்டார்.

அந்த தேர்தல் தோல்வியுடன் மகிந்த அரசியலில் இருந்து ஓய்வு பெற்றிருந் தால் கௌரவமாவது மிஞ்சியி ருக்கும். அரசியல் அதிகாரப்பசி அவரை விடவில்லை. இலங் கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்தவர்களில் பதவியில் இருந்து இறங்கிய பின்னர் சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக வரும் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திக் காட்டியவர் மகிந்தவே. அவரைத் தொடர்ந்து மைத்திரிபால சிறிசேனவும் இப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தங்களுக்கு நிவாரணம் கோரி மக்கள் ஆரம்பித்த வீதிப் போராட்டங்கள் இன்று அரசியல் புரட்சியொன்றின் பரிமாணங்களை எடுத்து " ஆட்சிமுறைமை" மாற்றத்தை வேண்டிநிற்கின்றன. மக்கள் மத்தியிலும் இளைய தலைமுறையினர் மத்தியிலும் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களை புரிந்துகொள்ள இயலாத நிலையில் மகிந்த ராஜபக்ச இடைக்கால அரசாங்கம் அமைந்தாலும் அதற்கும் தானே பிரதமர் என்று மமதையுடன் பேசினார்.

மே 9 அலரிமாளிகைக்கு அழைத்துவரப்பட்ட தனது ஆதரவாளர்களை காலிமுகத்திடலுக்கு கட்டவிழ்த்துவிடுவதற்கு முன்னதாக உரையாற்றிய மகிந்த "சவால்களைக் கண்டு அஞ்சுபவனல்ல இந்த மகிந்த ராஜபக்ச" என்று மார்தட்டினார்.

ஆனால் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது அரசாங்க அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து நாட்டின் பல பாகங்களிலும் வன்முறைகள் பரவிய நிலையில் சில மணித்தியாலங்களில் அவர் பிரதமர் பதவியில் இருந்து விலகும் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கவேண்டியேற்பட்டது. நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து அமைதியாக மக்கள் வாழ வழிவகுத்தவராக தன்னைப் பற்றி பெருமை கூறுகின்ற மகிந்த ராஜபக்ச இறுதியில் இலங்கை எரிந்துகொண்டிருப்பதற்கு மத்தியிலேயே பதவியில் இருந்து இறங்கிய விசித்திரத்தைக் கண்டோம்.

சென்னையில் இருந்து வெளியாகும் இந்தியாவின் முக்கியமான ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான "தி இந்து " மே 11 மகிந்த ராஜபக்சவின் வீழ்ச்சி குறித்து எழுதிய ஆசிரிய தலையங்கத்தின் இரு பந்திகள் ராஜபக்ச ஆட்சியை கச்சிதமாக வர்ணித்திருந்தன.அவை வருமாறு:

"இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆட்சிக்கு எதிரான பரந்தளவிலான மக்கள் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக மூண்டிருக்கும் அசாதாரணமான வன்முறைகளுக்கு மத்தியில் அவரது பதவி விலகல் கடந்த ஒன்றரை தசாப்த காலத்தின் பெரும்பகுதி பூராவும் நாட்டில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டு வந்த அரசியல் குறியீடு (Political brand) ஒன்றின் சடுதியான வீழ்ச்சியைக் குறித்து நிற்கிறது.

"வீறுமிக்க தேசியவாதமும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டலும் என்றென்றைக்குமே முடிவற்றதாக இருக்கக் கூடிய ஆதரவுத் தளம் அல்ல என்பதும் மக்கள் பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கும்போது அந்த ஆதரவு தளத்தினால் பயனில்லை என்ப துமே ராஜபக்ச குறியீட்டின் முடிவில் இருந்து வெளிப்படும் பெரிய செய்தியாகும்."

# இலங்கை நெருக்கடியில் இந்தியா உதவுவது ஏன்?

**- இரா.கணேஷ்குமார் (அரசியல் ஆய்வாளர், சென்னை)**

ஒவ்வொரு நாடும் எந்தவிதமான கொள்கையை உருவாக்கி, அதன் வழியில் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்கிறது என்பதை கவனிக்க வேண்டும். இந்தியா, ஜனநாயக கட்டமைப்பை கொண்டது. இலங்கை, சோஷியலிசம் மற்றும் கம்யூனிசம் கலந்த கொள்கையின் கீழ் அதிகார கட்டமைப்பை கொண்டது. இந்த கொள்கை வகுத்து செயல்படும் நாடுகள் அனைத்துமே, இலங்கையில் ஏற்பட்டது போன்ற நெருக்கடியை சந்தித்து வருகின்றன. அதனால் தான், பெரிய நாடுகள் கூட, அந்த கொள்கையில் இருந்து விலகி வருகின்றன.



சீனாவின் ஆட்சி முறை சித்தாந்தமும், சோஷியலிசமும், கம்யூனிசமும் கலந்தது தான். ஆனால், அதை முழுமையாக பின்பற்றினால், நாட்டில் சீரான வளர்ச்சி இருக்காது என்பதால், அதில் இருந்து சிறிது மாறி தான் செயல்படுகின்றனர். இந்தியாவில் விவசாயம் பிரதானம் என்றாலும், சேவை துறையில் பெரும் வளர்ச்சி அடைந்து விட்டோம். அதனால், ஒரு துறையை மட்டும், இந்திய பொருளாதாரம் சார்ந்திருக்கவில்லை. அதாவது, இந்தியாவின் வாடிக்கையாளர்கள், ஒரு தரப்பினர் மட்டும் அல்லர். ஆனால், இலங்கையில் அப்படி அல்ல.

*தேயிலை, சுற்றுலா, இரத்தின கற்கள் மட்டுமே, இலங்கைக்கு பிரதானமான வருமானத்தை கொடுப்பவை. கொரோனாவை தொடர்ந்து, உற்பத்தி குறைந்து தொழில்கள் படுத்து விட, மொத்த வருமானமும் பாதிக்கப்பட்டது

* ஏற்கனவே வெளிநாடுகளில் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயத்தை மேம்படுத்த எடுத்த தவறான கொள்கை முடிவு, சிக்கலை ஏற்படுத்தி விட்டது

* இலங்கை அரசு, தனியார் மயமாக்கல் விஷயத்தில் கெடுபிடியாக இருந்தது. அது போட்டியில்லாத வர்த்தகத்தை ஏற்படுத்தி தரம் குறைந்ததுடன், ஒரு கட்டத்தில் வியாபார வளர்ச்சியும் குறைந்தது

* மொழி, இனம் பிரச்னையால் உருவான உள்நாட்டு போர் பாதிப்பு முழுமையாக முடியவில்லை. இப்படி, இலங்கை சந்திக்கும் பிரச்னைகளை அடுக்கலாம்.

இந்த மொத்த சூழலுக்கும் நாட்டை ஆளும் ராஜபக்சே குடும்பத்தினர் தான் காரணம் என, ஒட்டுமொத்த இலங்கை மக்கள் நினைக்கின்றனர். அவர்களின் மொத்த கோபமும் ராஜபக்சே சகோதரர்கள் மீதே உள்ளது. மக்கள் எதிர்ப்பை தவிர்க்க, எதிர்க்கட்சிகளுடன் கூடிய மக்கள் அரசு என்று, ஒரு திட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், இலங்கையில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒன்றுடன் ஒன்று பின்னி பிணைந்து கூட்டாக கொள்ளையடித்தன. அதனால், மக்கள் அவர்களையும் நம்ப தயாரில்லை.



மகிந்த ராஜபக்சே பதவி விலகினால் மட்டுமே, தன் தலைமையில் புதிய அமைச்சரவைக்கு ஏற்பாடு செய்யலாம் என்று கூறி வந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா மீதும், மக்களுக்கு நம்பிக்கை இல்லை. அதிபருக்கு, நாளுக்கு நாள் எதிர்ப்பு வலுத்து வரும் நிலையில், மக்கள் கிளர்ச்சியை அடக்கும் நெருக்கடி ராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளது.

ஆட்சி அதிகாரத்துக்கு கட்டுப்பட்ட அமைப்பாக, இன்று வரை இருந்து வருவதால், மக்கள் கிளர்ச்சியை அடக்க, ராணுவம் தனிப்பட்ட முறையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதே நேரத்தில், நிலைமையை பயன்படுத்தி, ராணுவ புரட்சி ஏற்பட்டு, இலங்கையிலும் ராணுவ ஆட்சி அமைந்து விடுமோ என்ற அச்சமும் உள்ளது. அப்படியொரு சூழல் உருவாகுமோ என்று தான் இந்தியாவும் கவலைகொண்டுள்ளது.

இந்தியாவை பொறுத்தவரை, அண்டை நாடுகள், ராணுவம் கட்டுப்பாட்டுக்குள் சென்று விட்டால், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆதிக்கத்துக்குள் சென்று விடும் வாய்ப்பு உள்ளது. இலங்கையில் ஸ்திரத்தன்மையற்ற சூழல் தொடருவதை, இந்தியா விரும்பவில்லை.

அதனால் தான், இலங்கையின் பொருளாதார சூழலை சரிப்படுத்த, பல உதவிகளை செய்து வருகிறது. இலங்கைக்கு சர்வதேச நிதியம் கடன் கொடுப்பதை முழுதுமாக நிறுத்தி விட்ட சூழலில், இந்தியா தான் எல்லா உதவிகளையும் இலங்கைக்கு செய்தாக வேண்டும்.

**இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் பலரும், இலங்கைக்கு சென்றுள்ளதாக தகவல். கூடவே, கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் பொறுப்பையும், இந்தியா ரகசியமாக ஏற்று இருக்கிறது.**

இதற்காக, இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் பலரும், இலங்கைக்கு சென்றுள்ளதாக தகவல். கூடவே, கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் பொறுப்பையும், இந்தியா ரகசியமாக ஏற்று இருக்கிறது. கடந்த 1988ல் மாலத்தீவிலும் ராணுவ புரட்சி வெடித்தது. அப்போது பிரதமராக இருந்த ராஜிவ், மாலத்தீவுக்கு இந்திய ராணுவத்தை அனுப்பி வைத்தார் மாலத்தீவில் அமைதி நிலவ ஏற்பாடு செய்தார்.

அன்று முதல் மாலத்தீவு மக்களும், அரசும் இன்று வரை இந்தியாவுக்கு விசுவாசமாக உள்ளனர். அதேபோல தான், இன்றைக்கு இலங்கைக்கு உதவினால், வருங்காலத்தில் அந்நாட்டு மக்களும் இந்தியாவுக்கு ஆதரவாக இருப்பர். இலங்கையின் இன்றைய சூழல் மாற வேண்டும் என்றால், நாடு எந்த நிலையில் இருக்கிறது என்பதை அந்நாட்டு மக்கள் நன்கு உணர்ந்து, அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

அதனால், இந்தியாவின் ஆதரவை முழுமையாக பெற்று, நாட்டை இன்றைய இக்கட்டில் இருந்து மீட்டெடுக்க முயற்சிக்க வேண்டும்.

(இந்தக் கட்டுரை ரணில் பிரதமராக பதவியேற்பதற்கு முன்னதாக எழுதியது. இன்று நடப்பது என்ன என்பதை இந்தக் கட்டுரை ஓரளவு தெளிவுபடுத்துவதால் அதன் முக்கியத்துவம் கருதி வெளியிடப்பட்டுள்ளது. ஆ-ர்)

ஈழநாடு



# ஏனிந்த பொருளாதார நெருக்கடி?

## மனம் திறக்கும் மக்கள்

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

போராட்டங்கள் - ஆர்ப்பாட்டங்கள் - பேரணிகள் - வன்முறைகள் - கலவரம் என நாடு முழுவதும் கடந்த வாரம் பற்றியெரிந்தது. மக்களின் கோபம் அதிகமானதன் விளைவால் நாட்டின் அதியுச்ச அதிகாரங்களை கொண்டிருந்த ராஜபக்ஷக்கள் மற்றும் ஆளும் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், அரசியல் வாதிகளுக்கு சொந்தமான பல வீடுகள் தீ வைத்துக் கொழுத்தப் பட்டன. இதுதவிர, அரசியல்வாதிகளுக்கு சொந்தமான வாகனங்கள், பொருட்கள் எனப் பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இது எல்லாவற்றையும்விட ஒரு பாராளுமன்ற உறுப்பினர், 3 பொலிஸார் உட்பட 9 உயிர்களை இந்தக் கலவரம் பலிகொண்டது. இந்தக் கலவரம் உருப்பெற்றதன் அரசியல்மயப்பட்டு இருப்பினும் இதன் அடிப்படை பிரச்னை பொருளாதார நெருக்கடிதான். பொருளாதார நெருக்கடியின் விளைவே பொருட்களின் விலை அதிகரிப்பு - பொருட்கள் தட்டுப்பாடு என விரிந்து போராட்டங்களுக்கும் - கலவரங்களுக்கும் வித்திட்டது.

இந்தப் பொருளாதார வீழ்ச்சியே ஒருவேளை உணவுக்காக மக்களை அலைந்து திரியவும் - நீண்ட வரிசைகளில் காத்திருக்கவும் வைத்துள்ளது.

எது எப்படி இருப்பினும் இந்தப் பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்டிருபபது அடித்தட்டு வர்க்க மக்களே. அன்றாட உழைப்பின்மூலம் கிடைக்கும் வருமானத்தை மட்டுமே நம்பி சீவனோபாயத்தை கொண்டு நடத்தும் இந்த மக்களின் வாழ்வை பொருளாதார நெருக்கடி மேலும் இருளுக்குள் தள்ளியுள்ளது.

அவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு அரசின் அல்லது அடுத்தவரின் உதவிகளை நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஆனால், அவர்களுக்கு உதவிகளை வழங்கும் நிலையில் அரசாங்கமோ அல்லது தனவான்களோ இல்லை என்பதே யதார்த்த உண்மை.

இந்நிலையில், தங்கள் சீவனோபாயத்துக்காக அன்றாட வருமானத்தை - தினசரி உழைப்பை பெறும் மக்கள் இந்தப் பொருளாதார நெருக்கடி குறித்து என்ன அறிந்துள்ளார்கள் - நெருக்கடிகளை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் - சமாளிக்கின்றனர் என்று இங்கே சிலர் மனம் திறக்கின்றனர்.

### பொறுத்திருந்து பார்ப்போம்!



**ரொபின் வின்சன்**
யாழ்ப்பாண பேருந்து நிலைய கடை உரிமையாளர்

முன்னைய கால வியாபாரத்தை விட, தற்போதைய வியாபாரத்தில் பெரிதும் இடர்பாடுகளை எதிர்நோக்குகிறோம். மக்கள் விரும்பிய பொருட்களை பார்த்து விட்டு அதிக விலை என்று கூறிவிட்டு வாங்காது விட்டுச் செல்லும நிலையே உள்ளது.

மிகப்பெரிய இக்கட்டு நிலைக்குள் நாங்கள் வியாபாரத்தை நடத்துகிறோம். நாளுக்கு நாள் கொள்முதல் செய்யப்படுகின்ற பொருட்கள் நாளொன்றுக்கு ஒவ்வொரு விலையாக அதிகரித்துச் செல்கின்றது. பெற்றோல், மண்ணெண்ணெயை வரிசையில் நின்று பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போது மக்கள் இக்கட்டான நிலைக்கு சென்று விட்டார்கள். தற்போது வாழ்வாதாரத்தை மேற்கொள்வது என்பது மிகவும் கடினமாகவுள்ளது. வியாபாரம் மிகவும் மோசமடைந்து காணப்படுகின்றது. இதற்குமேல் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாதளவுக்கு இக்கட்டான நிலையுள்ளது. உதாரணமாக சாதாரண ஒரு பிஸ்கெற் பைக்கற் இரண்டு மடங்காக விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மக்கள் இதனை வாங்குவார்களா என்பது கேள்விக்குறிதான்.

இதேபோல அனைத்து விலைகளும் அதிகரித்துள்ளன சாதாரண விலையேற்றம் என்று கூற முடியாது. இது பத்து ரூபாய், இருபது ரூபாய் விலை ஏற்றம் அல்ல. ஒரேடியாக பல மடங்காக விலையை அதிகரித்துள்ளார்கள்.

மின்சாரம் இல்லை, அதிக வெயில் காலமான இந்தக் காலத்தில் குளிர்ந்த சோடா, தண்ணீரைக்கூட விற்கமுடியாதுள்ளது. அத்துடன், பொருட்களின் விலைகளை நாங்கள் மக்களிடம் சொல்லும்போது ஒரு பதற்றமான நிலை காணப்படுகின்றது. மக்கள் இதை ஏற்பார்களா என்ற நிலையுள்ளது. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்க முடியும்.

### ஏனிந்த நிலை...?

**திருமதி தவமணி**
கச்சான் வியாபாரி, யாழ். பேருந்து நிலையம்.



வட்டுக்கோட்டையில் இருந்து வந்து யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் கச்சான் வியாபாரத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டு வருகின்றேன்.

முன்னர் ஒரு கிலோ கச்சானை 250 ரூபாய்க்கு வாங்கி வறுத்து விற்பனை செய்து வந்தேன். இன்று ஒரு கிலோ கச்சான் 750 ரூபாய்க்கு விற்கப்படுகினறது. கச்சானை எப்படி நான் வாங்கி விற்பது.

எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு நிலவுவதால் விறகை காசு கொடுத்து வாங்கி கச்சானை வறுத்து விற்பனை செய்யவேண்டியுள்ளது.

நான் வட்டுக்கோட்டையில் இருந்து பேருந்தில் யாழ்ப்பாணம் வந்து செல்வதற்கு 200 ரூபாய் செலவாகிறது. 250 ரூபாய்க்கு விற்ற இப்போது 750 ரூபாய்க்கு விற்பதால் நான் ஒரு சுண்டு கச்சானை 100 ரூபாய்க்கு விற்கிறேன். அவ்வாறு விற்றாலும் இலாபம் எனக்கு பெரிதாக இல்லை. கிடைக்கும் இலாபமும் போக்குவரத்துக்கு செலவாகி விடுகிறது. இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்று தெரியவில்லை. தினமும் கச்சான் விற்றால் மட்டுமே எனது பிழைப்பு ஓடும்.



### தூரநோக்கு இல்லை!



**தம்பிப்பிள்ளை சற்குணராஜா,**
புடவை வியாபாரி.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் புடவை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளேன். வர்த்தக சங்கத்திலும் உறுப்பினராக உள்ளேன்.

தற்போது அதல பாதாளத்தை நோக்கி பொருட்களின் விலை சென்று கொண்டிருக்கின்றது. எல்லா பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விலை காணப்படுகிறது. சொல்ல முடியாத ஒரு துன்பத்தை வாடிக்கையாளர்கள் எதிர்கொண்டுள்ளனர். இப்படியே போனால் தொழில் செய்ய முடியாத நிலையேற்படும்.

இந்த நிலைமை ஏற்பட இன்னோரன்ன அரசியல் காரணங்கள் இருக்கலாம். பொருளாதார தூரநோக்கு இல்லாத காரணங்களாகவும் அவை இருக்கலாம். பொதுவாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட என்ற நிலையில் இந்த நாட்டில் வாழக்கூடியவர்கள் என்ற நிலையிலும் - வாடிக்கையாளர் என்ற நிலையிலும் - நுகர்வோர் என்ற ரீதியிலும் நாங்கள் பல வழிகளிலும் துன்பப்படுகிறோம்

குறிப்பாக, மின்சார பிரச்னை பெரிய பிரச்னையாக உள்ளது. மின்சாரம் ஓர் அத்தியாவசிய தேவை. தொழில் நேரத்தில் அது இல்லாமல் உள்ளது. புடவைக் கடையைப் பொறுத்தவரை மின்சாரம் இல்லாவிட்டால் வியாபாரமும் இல்லை. இதனால், பல துன்பங்களையும் துயரங்களையும் எதிர்நோக்குகிறோம். இந்த நிலைமையில் எமது வாழ்வாதாரம் இருக்கின்றது எனவே இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### வியாபாரமற்ற நிலையில் நாம்!



**தம்பிராசா,**
பழக்கடை வியாபாரி.

முன்னரை விட தற்போது பழங்களுக்கு தட்டுப்பாடு உள்ளது. பொருட்களின் விலையும் அதிகமாகக் காணப்படுகின்றது. வியாபாரமில்லாத நிலையை எதிர்நோக்குகிறோம். இது மிகவும் கவலைக்கிடமான நிலையாகி வருகின்றது. முன்னர், பழங்களை 6,000 - 6,500 வரை கொள்வனவு செய்தோம். ஆனால், தற்போது 17,000 ரூபாய் வரைகூட செல்கின்றது. அதனால் நாங்கள் அதிக விலைக்கு பழங்களை விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

வசதி படைத்தவர்கள் இப்போது அதிக விலையிலும் பழங்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆனால், முன்னரைப் போல எமக்கு வியாபாரம் இல்லை. முன்னர் போல தற்போது பழங்கள் கிடைப்பதுமில்லை.

நாம் அதிகவிலைக்கு பழங்களை வாங்கி விற்றுவிட்டு, அந்தப் பணத்தை நாம் பழங்களை வாங்கியவரிடம் கொடுத்துவிட்டு செல்லும் நிலையே உள்ளது.

## திரைவிமர்சனம்




# திரைப்படம் - டான்

**இயக்கம் - சிபி சக்கரவர்த்தி**
**இசை - அனிருத்**
**நடிப்பு - சிவகார்த்திகேயன், எஸ்ஜே சூர்யா, பிரியங்கா அருள்மோகன்**

தமிழ் சினிமாவில் ஒரு கலகலப்பான கல்லூரிக் கதையைப் பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டது. அந்தக் குறையை இந்தப் படம் போக்கியிருக்கிறது. அறிமுக இயக்குநர் சிபி சக்கரவர்த்தி இளைஞர்களை குறிவைத்து இந்தப் படத்தை இயக்கியுள்ளார்.

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர் சிவகார்த்திகேயன். சிறு வயதிலிருந்தே கண்டிப்பான அப்பா சமுத்திரக்கனி. மகன் படித்து பொறியியலாளராக வேண்டும் என சிவகார்த்திகேயனை பொறியியல் கல்லூரியில் சேர்த்துவிடுகிறார் சமுத்திரக்கனி. படிப்பு அதிகம் ஏறாத சிவகார்த்தி கேயன் தனக்குப் பிடித்த ஒன்றை செய்யும் முயற்சியில் இறங்குகிறார். அதில் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இன்றைய பொறியியல் படிப்பையும், கல்லூரிகளையும், அதில் படிக்கும் மாணவர்களையும், சில பெற்றோர்களின் ஆசைகளையும் உள்ளது உள்ளபடி படம் முழுவதும் காட்டியிருக்கிறார்கள். பெற்றோர் ஆசைகளுக்காக பொறியியல் படிக்க வரும் ஒரு மாணவன், மிகவும் கண்டிப்பாக நடந்து கொண்டால்தான் கல்லூரிக்கு நல்ல பெயர் கிடைக் கும் என நினைக்கும் நிர்வாகம், தான்பட்ட கஷ்டத்தை தன் மகன் படக் கூடாது என நினைக்கும் அப்பா இவைதான் இந்த "டான்".

இன்றைய ரசிகர்களின் மனநிலை என்ன என்பதை அறிந்து தனது படங்களையும், கதாபாத்திரங்களையும் தேர்வு செய்வதில் கவனமாக இருக்கிறார் சிவகார்த்திகேயன். தனக்குப் பிடித்ததைக் கண்டுபிடித்து அதில் ஜெயிக்க வேண்டும் என நினைக்கும் சக்கரவர்த்தி கதாபாத்திரத்தில் சர்வ சாதாரணமாய் நடித்துள்ளார் சிவகார்த்திகேயன். அவருடைய கதாபாத்திரம் தான் இன்றைய பல இளைஞர்களின் நிஜவாழ்க்கை. அவர்களுக்குப் பிடித்ததை விட தங்கள் பெற்றோர்களுக்குப் பிடிக்கிறதே என தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டு கடைசியில் அதிலேயே மூழ்கிவிடுகிறார்கள். காதலன், நண்பன் ஆகியோரை விட அப்பாவின் கண்டிப்புக்குப் பயந்தவராக கொஞ்சம் அதிகமாகவே ஸ்கோர் செய்கிறார் சிவகார்த்திகேயன். ஆனா லும், அவருடைய ஒப்பனையும், தலை அலங்காரமும் வழக்கமாகவே இருந்திருக்கலாம். என்னமோ செய்து அவரை எப்படியோ மாற்றியுள்ளார்கள்.

சிவகார்த்திகேயன் காதலியாக பிரியங்கா அருள்மோகன். இருவ ருக்கும் இடையில் கல்லூரியில் அதிகமான காதல் கதை இல்லை. ஆனால், பின்னணியில் பள்ளியில் நடக்கும் அந்தக் காதல் தான் அழகாக அமைந்து ரசிக்க வைக்கிறது. பள்ளி மாணவியாகவும், கல்லூரி மாணவி யாகவும் பிரியங்கா அவ்வளவு பொருத்தமாக இருக்கிறார்.

கல்லூரியின் அதிபராக இல்லை என்றாலும் கல்லூரியை தன் கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் பேராசிரியராக எஸ். ஜே. சூர்யா. "மாநாடு" போன்ற அதிமுக்கியத்துவமிக்க கதாபாத்திரங்களில் இவரைப் பார்த்து விட்டு, இது போன்ற லேசான கதாபாத்திரங்களில் பார்க்க என்னவோ போல் உள்ளது.

சிவகார்த்திகேயனின் நண்பர்களாக பாலசரவணன், ஆர்.ஜே விஜய்,ஷிவாங்கி. படத்தின் கலகலப்புக்கு பொறுப்பேற்று அதை சரியாகவும் செய்திருக்கிறார்கள். சிவகார்த்திகேயனின் அப்பாவாக சமுத்திரக்கனி. எங்கே அறிவுரை செய்வாரோ என நீங்கள் பயப்பட வேண்டாம். ஒரு சாதாரண அப்பாவாக வாழ்ந்திருக்கிறார். உச்சக்கட்டத்தில் பலரும் கண் கலங்க வைக்கும்படியான காட்சி உண்டு. சமுத்திரக்கனியின் மனைவியாக நடித்திருக்கும் ஆதிரா பாண்டிலட்சுமி அந்த ஒரே ஒரு காட்சியில் மனதில் நின்றுவிடுகிறார். முக்கியத்துவம் இல்லாமல் வந்து போகும் ஒரு கதாபாத்திரத்தில் சூரி.

அனிருத் இசையில் பாடல்கள் பட்டாசு ரகம். பின்னணி இசையும் குறிப்பிடும்படி உள்ளது. முழு கதையும் கல்லூரியிலேயே நடக்கிறது. அதனால் படத்தில் எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கிறது. எல்லாவற்றையும் சமாளித்து ஒளிப்பதிவு செய்துள்ளார் பாஸ்கரன்.பொறியியல் மாணவன் சினிமாதான் தனது எதிர்காலம் என முடிவு செய்வதற்குப் பதிலாக வேறு எதையாவது வைத்திருந்தால் இன்னும் கொஞ்சம் யதார்த்தமாக இருந்திருக்கும்.



# மீளவும் இயக்குநர் அவதாரம்

சுப்ரமணியபுரம் படத்தின் மூலம் வெற்றிகரமான இயக்குநராகவும் நடிகராகவும் ஒரே சமயத்தில் அறிமுகமாகி வென்றவர் சசிகுமார். அடுத்ததாக ஈசன் என்கிற படத்தை இயக்கினார். முதல் பட அளவுக்கு அவருக்கு பெரிய வெற்றி கிடைக்கவில்லை. அதேசமயம் ஒரு நடிகராக அவருக்கு வரவேற்பு கிடைத்தது. இதனால், கடந்த 10 ஆண்டுகளில் பல படங்களில் நடித்து விட்டார்.

ஆனால், சுந்தரபாண்டியன், நாடோடிகள் என மிகச் சில படங்களே அவருக்கு வெற்றி பட வரிசையில் அமைந்தன. இந்த நிலையில் தற்போது அவர் மீண்டும் படம் இயக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகின்றன.



# நகைச்சுவையில் தமன்!

தமிழில் கடைசியாக சுந்தர்.சி இயக்கத்தில் விஷால் நடித்த ஆக்ஷன் படத்துக்கு பிறக்கு தமன்னாவுக்கு  புதிய பட வாய்ப்புகள் இல்லை. இருந்தாலும், தெலுங்கில் குருதண்ட சீதாகளம், எப்-3, போலா சங்கர் போன்ற படங்களில் நடித்து வருகிறார்.

இதில் தெலுங்கில் வெங்கடேஸூக்கு ஜோடியாக எப்-3 என்ற படத்தில் ஹரிதா என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தில்கதைக்கு திருப்புமுனை வாய்ந்த கதாபாத்திரம். மிக பிரமாதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வெங்கடேசுடன் நடித்துள்ள இளவட்ட ரசிகர்கள் மத்தியில் மிகப் பெரிய அளவில் சென்றடையும் இதில் நகைச்சுவை காட்சிகளில் நடித்துள்ளாரென்று தமன்னா கூறியுள்ளார்.



# விஜயுடன் பேச்சு

கீர்த்தி சுரேஷ் நடிப்பில் வெளியான 'சாணிக் காயிதம்' படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றிருக்கிறது. நாயகியை மையப்படுத்திய கதைகளுக்கு, சமீபகாலமாக முக்கியத்துவம் கொடுத்துவந்த கீர்த்தி சுரேஷ், இத்தகைய படங்கள் பெரிதாக கவனம் ஈர்க்காததால், பழையபடி நாயகர்களுடன் ஜோடி போடவே விரும்புகிறாராம். இதற்காக, அவர் யாருடன் பேச்சு நடத்தியிருக்கிறார் தெரியுமா... நடிகர் விஜயுடன்! "அப்படியொரு கதை அமைந்தால் நிச்சயம் சேர்ந்து நடிப்போம்" என உறுதி கொடுத்திருக்கிறாராம் விஜய்.

# கவர்ச்சியில் லாஸ்லியா

இலங்கையரான லாஸ்லியா மரியநேசன் பிக் பாஸ் நிகழ்ச்சி மூலம் திரையுலகுக்குள் நுழைந்தார்.

ஆரம்பத்தில் குடும்பப் பாங்காக இருந்த லாஸ்லியா சினிமா வாய்ப்புகளாலும் மொடலிங் வாய்ப்புகளால் தற்போது, உடல் எடையை குறைத்து ஒல்லியானதுடன் விதவிதமான உடைகளில் கவர்ச்சியும் காட்டி வருகிறார்.

தற்போது வெள்ளை நிற உடையில் தேவதை போல் ஜொலிக்கும் தனது புகைப்படங்களை லாஸ்லியா வெளியிட்டுள்ளார். அந்த அழகான படங்களுக்கு சமூகவலைத்தளங்களில் பெரும் வரவேற்பு.



# அஜித்துடன் சமுத்திரகனி



அஜித் நடிக்கும் 61வது படத்தை போனி கபூர் தயாரிக்க இருப்பதாக அதிகாரபூர்வமாக சமீபத்தில் அறிவித்தார். இந்த படத்தில் அஜித் நீண்ட நாட்களுக்கு பிறகு வில்லன் கதாபாத்திரத்தில் நடிப்பதாகவும், இவருக்கு ஜோடியாக நடிகை மஞ்சு வாரியார் நடிக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

"பாகுபலி, கேஜிஎப் 2 , சார்பட்டா பரம்பரை" போன்ற படங்களில் நடித்த நடிகர் ஜான் கொக்கன் இணைந்துள்ளாரென சமீபத்தில் தகவல் வெளியானது. இந்நிலையில் நடிகர் சமுத்திரக்கனி இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் அஜித்துடன் இணைந்து நடித்து வருகிறார் என்று கூறப்படுகிறது.

# சம்பியன்ஸ் லீக்: இடம் யாருக்கு?



பிறீமியர் லீக்கில் இருந்து 2022-23 சம்பியன்ஸ் லீக் தொடருக்கு தகுதி பெறப் போகும் அணிகள் எவை என்ற போட்டி விறுவிறுப்படைந்திருக்கிறது. ஆர்செனல் அணிக்கெதிரான போட்டியை டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணி 3-0 என வெற்றி பெற்றுள்ள நிலையில், கடைசி 2 இடங்களுக்கு இப்போது 3 அணிகள் போட்டியில் உள்ளன!

வழக்கமாக பிறீமியர் லீகில் முதல் நான்கு இடங்கள் பிடிக்கும் அணிகள் அடுத்த தொடரில் சம்பியன்ஸ் லீக் தொடருக்குத் தகுதி பெறும். பிறீமியர் லீக்கில் இருந்து முதல் இரண்டு இடங்கள் பிடித்திருக்கும் மன்செஸ்டர் சிற்றி மற்றும் லிவர்பூல் அணிகள் ஏற்கெனவே தகுதி பெற்றுவிட்டன. மீதமிருக்கும் இரண்டு இடங்களுக்குத்தான் இப்போது மிகவும் பெரிய போட்டி ஏற்படடிருக்கிறது. நிச்சயம் சம்பியன்ஸ் லீக் தொடருக்குத் தகுதி பெற்றுவிடும் என்று நினைக்கப்பட்ட செல்சீ, தொடர்ந்து புள்ளிகளை இழந்து தடுமாறிக்கொண்டிருக்கிறது. அதேசமயம் ஆர்சனல், டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிகள் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு அந்த அணியுடனான இடைவெளியைக் குறைத்திருக்கின்றன.

டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் ஸ்டேடியத்தில் ஆர்சனல் அணியை வெள்ளிக்கிழமை அதிகாலை சந்தித்தது ஸ்பர்ஸ். இந்தப் போட்டியில் தோல்வியடைந்தால் ஸ்பர்ஸ் அணியின் சம்பியன்ஸ் லீக் கனவு முடிவுக்கு வந்துவிடும். அதனால், பயங்கர உத்வேகத்தோடு ஆடியது அன்ரனியோ கான்டேவின் அணி. சிறப்பான தொடக்கத்தின் பலனாக, 21ஆவது நிமிடத்தில் அந்த அணிக்கு பெனால்டி கிடைத்தது. கோல் கம்பத்துக்கு அருகே சன் ஹியூங் மின்-ஐ கீழே தள்ளினார் செட்ரிக் சோர்ஸ். அதனால் கிடைத்த பெனால்டியை ஹேரி கேன் கோலாக்க, 1-0 என முன்னிலை பெற்றது டாட்டன் ஹாம் ஹாட்ஸ்பர்.

33ஆவது நிமிடத்தில் ஆர்சனல் அணிக்கு அடுத்த அடி விழுந்தது. அதுவும் மிகப்பெரிய அடி. இரண்டாவது மஞ்சள் அட்டை பெற்று போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார் தடுப்பாட்ட வீரர் ராப் ஹோல்டிங். 27ஆவது நிமிடத்தில் சன்-ஐ பவுல் செய்ததற்காக முதலில் மஞ்சள் அட்டை பெற்றார் ஹோல்டிங். அடுத்த ஆறு நிமிடங்களில் இன்னொரு முறை அவரையே பவுல் செய்து இரண்டாவது மஞ்சள் அட்டை பெற்று வெளியேறினார். அதனால், அடுத்த ஒரு மணி நேரமும் 10 வீரர்களோடு விளையாட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது ஆர்சனல். ஏற்கெனவே பல தடுப்பாட்ட வீரர்கள்காயத்தால் அவதிப் பட்டிருப்பதால், ஆர்சனல் அணியால் இன்னொரு தடுப்பாட்ட வீரரைக் களமிறக்க முடியவில்லை.

37ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலையும் அடித்தது டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர். கிடைத்த கோணர் வாய்ப்பை பெனால்டி ஏரியாவுக்கு அனுப்பினார் சன். அதை தலையால் முட்டி கோல் கம்பத்துக்குஅருகே அனுப்பினார் ராட்ரிகோ பென்டன்கர். அதை, சுழன்று தலையால்முட்டி கோலாக்கினார் ஹேரிகேன். அதனால், இரண்டு கோல்கள் முன்னிலை பெற்றது டாட்டன் ஹாம் ஹாட்ஸ்பர். 43ஆவது நிமிடத்தில் எட்டீ என்கெடியா அடித்த ஷாட்டை லோரிஸ் மிகச் சிறப்பாகத் தடுத்தார். அதனால், முதல் பாதி 2-0 என முடிவுக்கு வந்தது.

இரண்டாவது பாதி தொடங்கிய இரண்டே நிமிடங்களில் இன்னொரு கோலையும் அடித்தது டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர். பந்தோடு பாக்சுக்குள் நுழைந்த ஹேரி கேனைத் தடுத்து பந்தை டேக்கிள் செய்தார் கேப்ரியல். ஆனால், அந்தப் பந்து பாக்சின் ஓரத்தில் நின்றிருந்த சன் கால்களுக்கே செல்ல, அதை அற்புதமாக கோலாக்கினார் அவர். 51-வது நிமிடத்தில் புகாயோ சகாவின் ஷொட்டை பென் டேவிஸ் மிகச் சிறப்பாகத் தடுத்துவிட, அந்த வாய்ப்பும் வீணானது.

59ஆவது நிமிடத்தில் டாட்டன் ஹாம் ஹாட்ஸ்பர் அணி நான்காவது கோலை அடித்திருக்கும். கேன் பெனால்டி எல்லைக்குள் ஒரு பந்தை அனுப்ப, அதை கோல் நோக்கி தலையால் இடித்தார் எமர்சன் றோயல். அதை மிகச் சிறப்பாக தடுத்தார் ஆர்சனல் கோல்காப்பாளர் அரோன் ராம்ஸ்டேல். அடுத்த நிமிடத்தில், ஹேரி கேன் அடித்த ஷொட்டையும் தடுத்தார் ராம்ஸ்டேல். அடுத்த நிமிடத்தில் இன்னொரு வாய்ப்பையும் உருவாக்கியது டாட்டன் ஹாம் ஹாட்ஸ்பர். செசன்யான் தட்டிக் கொடுத்த வாய்ப்பை வலையில் அடித்து நான்காவது கோல் வாய்ப்பை வீணடித்தார் சன்.

80ஆவது நிமிடத்தில் டவாரஸ் தட்டிக் கொடுக்க கோல் நோக்கி அடித்தார் மார்டின் ஓடகார்ட். ஆனால், அதை ஹூகோ லோரிஸ் தடுத்துவிட்டார். அதன்பிறகு இரண்டு அணிகளாலும் வாய்ப்புகளை உருவாக்கவோ, கோலடிக்கவோ முடியவில்லை. அதனால், 3-0 என வெற்றி பெற்றது டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர்.

இந்த வெற்றியின் மூலம் 65 புள்ளிகள் பெற்றிருக்கிறது டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர். ஆர்செனல் அணியோ 66 புள்ளிகளோடு ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. நான்காவது இடத்தில் இருக்கும் செல்சீ 70 புள்ளிகள் பெற்றிருக்கிறது. கோல் வித்யாசத்தைப் பொறுத்தவரை டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணியைவிட செல்சீ 19 கோல்கள் அதிகமாகப் பெற்றிருக்கிறது. டாட்டன் ஹாம் ஹாட்ஸ்பர் அணியால் அதிகபட்சம் 61 புள்ளிகள் தான் எடுக்க முடியும் என்பதால், மீதமிருக்கும் 2 போட்டிகளில் செல்சீ 1 டிரா செய்தால் மட்டும் போதும். ஆக, அந்த அணியின் சாம்பியன்ஸ் லீக் வாய்ப்பு கொஞ்சம் அருகில் தான் இருக்கிறது.

தற்போது இருக்கும் சூழ்நிலையில் ஆர்செனல், டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிகளில் ஏதேனும் ஒரு அணி தான் அடுத்த தொடர் சம்பியன்ஸ் லீக் தொடருக்கு முன்னேற முடியும். ஆர்சனல் அணி மீதமிருக்கும் இரண்டு போட்டிகளில் நியூகாசில் யுனைடட் மற்றும் எவர்டன் அணிகளைச் சந்திக்கிறது. டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணி பர்ன்லி மற்றும் நார்விச் சிட்டி அணிகளோடு மோதவிருக்கிறது. இரண்டு அணிகளுமே அந்த இரு போட்டிகளையும் வெற்று பெறவேண்டும் என்ற நோக்கத்தில் விளையாடும் என்பதால், கடைசி வாரம் வரை பரபரப்பான போட்டி இருக்கப்போகிறது.

சமிபமாக செல்சீ அணியும் தடுமாற்றத்தோடு விளையாடி வருவதால், அவர்கள் இரண்டு தோல்விகளைச் சந்தித்தால், மற்ற இரு அணிகளுமேகூட முன்னேறிவிடும். ஆக, இந்த பிறீயர் லீக் தொடரில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.

# புருய்னாவின் தாண்டவம்!



**கெ**வின் டி புருய்னாவின் அட்டகாசமான ஆட்டத்தால் வோல்வர்ஹாம்ப்டன் வாண்டரர்ஸ் அணியைப் பந்தாடியது மன்செஸ்டர் சிற்றி. முதல் நிமிடம் முதல் 90-வது நிமிடம் வரை தன் வித்தையைக் காட்டிக்கொண்டே இருந்த டி புருய்னா 4 கோல்கள் அடித்து அசத்தினார். இந்த வெற்றியின் மூலம் பிறீமியர் லீக் புள்ளிப் பட்டியலில் லிவர்பூல் அணியுடனான 3 புள்ளி இடைவெளியை தக்கவைத்திருக்கிறது மன்செஸ்டர் சிற்றி.

மோலின்யூ மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் இரு அணிகளும் ஆரம்பத்தில் இருந்தே தாக்குதல் ஆட்டத்தை ஆடின. அதனால், முதல் அரை மணி நேரத்திலேயே 4 கோல்கள் அடிக்கப்பட்டன. முதல் கோல் ஏழாவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிற்றி அடித்தது. அட்டாகிங் தேர்டில் பந்தை மீட்ட டி புருய்னா, பெர்னார்டோ சில்வா உடன் 1-2 ஆடினார். பந்தைப் பெற்ற சில்வா, பொக்ஸூக்குள் அடிக்க, அதை தன் இடது காலால் கோல் நோக்கி அடித்து ஸ்கோர் செய்தார்.

உடனே வோல்வர்ஹாம்ப்டன் அணியும் அதிரடியாக பந்தோடு பொக்ஸூக்குள் நுழைந்த சிகுன்யோ கோலடிப்பார் என்று எதிர்பார்ப்பதற்குள், ஆய்மரிக் லபோர்ட் மிகச் சிறப்பாக அதை டேக்கிள் செய்தார். ஆனால், அடுத்த சில நிமிடங்களிலேயே வோல்வ்ஸ் அணி கோலடித்தது. அதிரடி காட்டிய மன்செஸ்டர் சிற்றி வீரர்கள் பந்தைத் தவறவிட, வோல்வ்ஸ் வீரர்கள் அதிரடியாக ஆடினர். ரௌல் கிமினஸ், பெட்ரோ நெடோவுக்கு பந்தை தட்டிக் கொடுக்க, அவர் அதை டென்டோன்கரிடம் அனுப்பினார். பொக்ஸின் ஓரத்திலிருந்து ஷூட் செய்து அதை கோலாக்கினார் டென்டோன்கர். ஆட்டம் 1-1 என சமனானது.

ஆனால், அந்த சமநிலை 5 நிமிடம் கூட நீடிக்க வில்லை. இடது விங்கில் இருந்த ஜின்சென்கோவுக்கு பந்தை பாஸ் செய்துவிட்டு முன்னேறினார் டி புருய்னா. அதை பொக்ஸூக் குள் இருந்த ஸ்டெர்லிங் குக்கு அனுப்ப நினைத்தார் ஜின்சென்கோ. ஆனால், வோல்வ்ஸ் கோல்காப்பாளர் ஜோஸே சா அதைத் தடுத்தார். இருந்தாலும் பந்து பொக்ஸூக்குள்ளேயே ரீபௌண்ட் ஆனது. அதை டி புருய்னாவே கோலாக்கி மீண்டும் மான்செஸ்டர் சிற்றிக்கு முன்னிலை ஏற்படுத்திக்கொடுத்தார்.

டி புருய்னாவின் தாண்டவம் அதோடு நிற்கவில்லை. 24ஆவது நிமிடத்தில் மூன்றாவது கோலையும் அடித்து ஹட்ரிக்கை நிறைவு செய்தார் அவர்.

84ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிற்றி ஐந்தாவது கோலை அடித்தது. கான்சலோ ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பை கோலாக்கி, சிட்டிக்கு 4 கோல்கள் முன்னிலை ஏற்படுத்திக் கொடுத்தார் ரஹீம் ஸ்டெர்லிங். அதன்பிறகு பல வாய்ப்புகள் உருவாகியும் இரு அணிகளாலும் எவற்றையும் கோலாக்க முடியவில்லை. இறுதியில் 5-1 என மன்செஸ்டர் சிற்றி வெற்றி பெற்றது.




- என்.கே.துரைசிங்கம்.

# அயலாள், ஆனைக்கோடரி வெளியீடும், அறிமுகமும்.

புகலிடத்தில் கவிதை,சிறுகதை இலக்கியத்தில் பிரசவித்து கொண்டிருப்பவர்களில் இருவரின் படைப்புகளின் புதிய வரவுகளையொட்டிய அறிமுகம், வெளியீடு, நூல்கள் கையளிப்பு நிகழ்வு அண்மையில் பாரிஸ் புறநகர்ப்பகுதியான லூ பூசே யில் நடைபெற்றது .கவிஞர் தர்மினியின் அயலாள் கவிதை நூல், ஆட்காட்டி ஆசிரியர் தர்மு பிரசாத் எழுதிய ஆனைக்கோடரி சிறுகதை தொகுதி ஆகியவற்றின் வரவுகுறித்த நிகழ்வு பாரிஸ் இலக்கிய ஆர்வலர்களுடன் நடைபெற்றது.

கொரோனா பெரும் தோற்றினால் முடங்கி போன இலக்கியம் தொடர்பான முகம் பார்த்து பேசும் நேரடி இலக்கிய சந்திப்புகள், விவாதம், உரையாடல் இரண்டு வருடங்க ளுக்கு பின்னர் இந்த நிகழ்வு மூலம் களை கட்டியது.

கவிஞர் தர்மினி அவர்களின் மூன்றாவது படைப்பு அயலாள், தலைப்பே கவிதை உச்சரிப்பை உணர்த்துகிறது. இத்துடன் மூன்று நூல்களை அவர் எழுதி வெளியிட்டுள்ளார். அவை எல்லாமே கவிதை ரசம் கொட்டியது.இருள்மிதக்கும் பொய்கை என்பது இவரது இன்னொரு படைப்பு. பெயரை கேட்டாலே அவரது கவித்துவம் பற்றி புரிந்து கொள்ள முடிகிறது.

**புலம்பெயர் மடல்**

ஆனைக்கோடரி, தர்மு பிரசாத்தின் முதல்பிரசவம். ஆனால் பல பிரசவங்களை கண்டவர் போல இதனை படைத்துள்ளார். இலக்கிய உலகில் நேர்மையான, கடுமையான விமர்சகர் என்று பெயரெடுத்தவர். அதனால் தனது எழுத்துகளில் கவனம் செலுத்துவார். மூத்த படைப்பாளிகளை மதிக்கும் பண்புகளை கொண்ட தர்மு பிரசாத், இலக்கிய போராளிகளான சோபா சக்தி மற்றும் சுகன் ஆகியோரை முன்னிறுத்தி இந்நூலை படைத்துள்ளார். “அவர்களை பார்த்துதான் வளர்ந்தேன். நன்றியுணர்வுடன் இதை அவர்களுக்கு சமர்ப்பித்தேன்” என தனது உணர்வை வெளிப்படுத்தினார்.

கறுப்பு பிரதிகள் வெளியீடு என்றாலே கனதியானது தான். பூக்கடைக்கு புகழ்ச்சி தேவையில்லை. இந்த இரண்டு நூல்களுமே கறுப்பு பிரதிகள் தான். அதன் தரம், வடிவமைப்பு, சுவை பற்றி இயம்பத்தேவையில்லை.

இந்த நிகழ்வை இளைய தலைமுறை எழுத்தாளர் ஏ.ஜே.டானியல் மற்றும் திருமதி ஜெகன் ஆகியோர் நெறிப்படுத்தினர். தில்லை.நடேசன், அசுரா நாதன் ஆகியோர் ஆனைக்கோடாரியையும் தா.பாலகணேசன், அகரன், விஜி ஆகியோர் அயலாளையும் அரங்கேற்றினர்.

தில்லை.நடேசன் பேசும் போது சிறுகதையின் தோற்றம்,வரலாறு, இலக்கியத்தில் அதன் வகிபாகம் எல்லாம் சொல்லி ஒரு ஆய்வரங்கே நடத்திவிட்டு சென்றார். அசுராநாதன் கதைகளத்துடன் உரை நிகழ்த்தினார்.

விஜி, அயலாள் கவிதைகளில் தனக்கு ஈர்ப்புள்ள கவிதைகளை வாசித்து பொழிப்புரை வழங்கினார். கவிதைகள் தலைப்புகள் இல்லாதிருப்பதை சுட்டிக்காட்டினார் .

“சட்டி எரிந்து கொண்டிருந்தது
எண்ணெய் சூடாகிவிட்டது
கடுகுப்போத்தல் கைதவறி உடைந்து போனது
வெங்காயம் வெட்டிக்கொண்டிருந்தபோது
தோன்றிய வரிகளை
என்ன செய்வது ?
அடுப்புக்குள் போட்டு எரித்துவிட்டு
கொதித்த குழம்பை இறக்கினேன்
கறி நல்ல ருசி” என்ற தர்மினியின் கவிதையை வாசித்து காட்டினார்.

இக்கவிதையை பலரும் வியந்து பேசினர்.

அகரன் அனைத்து உரைகளையும் உள்வாங்கி தனது உரையை நிகழ்த்தினார்.

மூத்த தமிழ் போராளி சி.புஸ்பராணி அவர்களின் சிறை வாழ்வையும் அவரது அகாலம் நூல் மற்றும் விடிவுக்கு முந்திய மரணங்கள் என்ற நூலை போராட்டக்களத்தி லிருந்து எழுதிய தா.பாலகணேசன் ஆகியோரை விதந்து போற்றினார். இருவரும் சபையில் அமர்நதிருந்தனர்.

உலகப்படைப்புகள் வரை ஆராய்ந்த அகரன் யப்பான் கைகூவை சுட்டிக் காட்டினார். இளையவர் இலக்கிய அரங்கிற்கு புதியவர் தான் ஆனாலும் கவிதை இலக்கியம் மற்றும் படைப்பாளிகளை மேற்கோள் காட்டிப்பேசினார். மு.தளையசிங்கம் போன்ற மூத்தவர்களையும் தன் கருத்துகளில் தூக்கி நிறுத்தினார். தனது பேச்சாற்றலால் சபையை கட்டிப்போட்டார்.

ஆனைக்கோடரி ஆசிரியர் தர்மு பிரசாத் மூத்த படைப்பாளி ஓசை மனோவிடமும், அயலாள் நூல் கவிஞர் தர்மினி மூத்தவர் சி.புஸ்பராணியிடமும் நூல்களை கையளித்தனர்.

ஆனைக்கோடரி ஆய்வுரைக்கு ஏ.டானியல் தலைமையேற்றார்.

“ஆனைக்கோடரியில் தீவிரமான பூடகமான சொற்பிரயோகம் கையாளப்பட்டிருக்கிறது. தர்மு பிரசாத் விமர்சனம், உரையாடல், ரசனை, அழகியல் உள்ளவர் தான் என்பதை இந்த தொகுதி உணர்த்துகிறது. எழுத்திலே சித்தரிப்பு, வடிவம், மொழிப்பிரயோகம் முக்கியமானது.

வாசகன் படைப்பாளியை உருவாக்கிறான். மொழி நடை இலகுவாக்கி வாசகர்களை கவரும் விதமான படைப்புகளே முழுமையான படைப்புகளாகும் ”என்று அசுரா நாதன் தனது ஆய்வுரையின் போது சுட்டிக்காட்டினார்.

பாரிஸ் இலக்கிய பரப்பிலிருந்து அண்மையில் மௌனித்துபோன தோழர் விஜயன், இலக்கிய போராளி நடு ஆசிரியர் கோமகன் ஆகியோரின் நினைவுகளை முன்னிறுத்தி தர்மு பிரசாத் நினைவேந்தல் நிகழ்த்தினார்.



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**பா. சிவநாதன், பருத்தித்துறை, வடமராட்சி.**

**கேள்வி:**
ரணில் விக்கிரமசிங்க பிரதமரானது பற்றி வியுக்தியார் என்ன நினைக்கிறார்.

**வியுக்தியார்:**
அவர் பதவியேற்றதும், அரசியல்தரப்பில் அனேகமாக அனைவருமே கண்டனம் தெரிவித்தார்கள். ஆனால் அமெரிக்க தூதுவரும், இந்தியத் தூதுவரும்தான் அவசரம் அவசரமாக அதனை வரவேற்றார்கள். இதுவே வியுக்தியாருக்கும் ஏன் உங்களுக்குமே ஒரு செய்தியைச் சொல்லியிருக்குமே. யார் வந்தால் என்ன, மண்ணெண்ணையும், காஸ் சிலிண்டரும் விலை குறையாவிட்டாலும் பரவாயில்லை, கிடைக்கப்பண்ணினாலே போதுமடா சாமி என்ற நிலைதான் வியுக்தியாருக்கு.

**எஸ். டிலக்சன், திருமலை வீதி, மட்டக்களப்பு**

**கேள்வி:**
பாதுகாப்பு காரணங்களுக்காக முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன உறுதிப்படுத்தியுள்ளாரே. அவருக்கு யாரால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது?

**வியுக்தியார்:**
அவரது பாதுகாப்புக்காகவா அல்லது, அவருக்கு எதிராக போராட்டம் நடாத்தியவர்களின் பாதுகாப்புக்காகவா என்பது தான் தெரியவில்லை. அவர் முன்னர் ஜனாதிபதியாக இருந்து தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், தங்காலையில் உள்ள தனது குடும்ப வீட்டுக்குத்தான் போனார், அப்படி இந்த முறையும் போயிருந்தால், அந்த வீட்டை தீக்கிரையாக்க வந்தவர்கள் மீது மகிந்தரின் பாதுகாப்புக்காக படையினர் துப்பாக்கிப்பிரயோகம் அல்லவா செய்திருக்க வேண்டிவந்திருக்கும். பலர் அதில் பலியாகவும் வேண்டிவந்திருக்குமே. அதுதான் அவர் வேறு எங்காவது இருப்பது மற்றவர்களுக்கு பாதுகாப்பானது என்று நினைத்திருப்பார்களோ தெரியவில்லை.

**ஆர்.பிரேம்நாத், வெள்ளவத்தை, கொழும்பு**

**கேள்வி:**
ஜனாதிபதி பதவி விலகினால்தான், பிரதமர் பதவியை ஏற்பேன் என அடம்பிடித்துவந்த சஜித் பிரேமதாசா, ரணில் பதவியேற்கவிருக்கிறார் என்றதும், அந்த நிலைப்பாட்டில் தளர்வை மேற்கொண்டது எதற்காக என்று நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:**
அதுதான் நீங்களே பதிலையும் சொல்லிவிட்டீர்களே. ரணில் பதவியேற்றால் தன்னோடு இருக்கும் சிலரையும் இழக்கவேண்டி வந்தவிடுமோ என்ற பயமாகவும் இருக்கலாம்.

**மா. ரமணன், அராலி வடக்கு, அராலி**

**கேள்வி:**
பாராளுமன்றத்தின் கீழ் புதிதாக உருவாக்கப்படவுள்ள, சட்ட மறுசீரமைப்புக் குழுவுக்கு எம்.ஏ. சுமந்திரனை தலைமை தாங்குமாறு பிரதமர் கேட்டிருக்கிறாராமே. தமிழ் மக்கள் சார்ந்த அரசியலைப்பு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் பிரதமர் தன்னிடம் கோரிக்கை விடுத்ததாலேயே தான் இதற்கு சம்மதித்தததாக அவர் தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:**
நல்ல விசயம்தானே. ஆனால் அது என்ன இவ்வளவு முக்கியமான ஒரு விடயத்தை ரணிலர் போனில் மாத்திரம் அவரிடம் கேட்டிருக்கிறார். பகிரங்கமாக அல்லவா இதுபற்றி அறிவிக்கவேண்டும்?. புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஒருதடவை ரணிலை பற்றி சென்னதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

# புண்ணியத்தை தேடி ...

**இணுவை சக்திதாசன்**
*(டென்மார்க்)*



டெலிபோன்மணி விடாமல் அடித்துக்கொண்டு இருந் தது. நல்ல தூக்கக் கலகத்தில் இருந்த சகுந்தலா, திடுக் கிட்டு எழுந்து டெலிபோனை தூக்கினாள் . அது யாழ்ப்பா ணத்தில் இருந்து வாசுகி " நான்தான் அக்கா" என்றாள் . "என்ன இந்த நேரத்தில என்று" மணிக்கூட்டை பார்க் காமலே சகுந்தலா கேட்க , " என்னக்கா ! இஞ்ச இப்ப ஒன் பது மணியாப் போச்சுது உங்க இன்னமும் விடியேல் லையோ ? "என்றாள்.

அப்பதான் சகுந்தலா "லைற்"றை போட்டு நேரத்தைப் பார்த்தாள் அதிகாலை ஐந்து மணியை அது காட்டியது .

டென்மார்க்கில் கோடை காலங்களில் இரவெல்லாம் பகலாகவும் பகலெல்லாம் இரவு போலவும் இருக்கும். கோடை காலங்களில் இரவு ஒன்பது பத்து மணிக்கே சூரியன் வானில் தெரியும். பனி காலங்களில் விடிந்தாலும் இராவகத்தான் இருக்கும் .

அப்படி ஒரு பனிக்காலம் தான் டென்மாக்கில் இப்போ ....

வேலை வெட்டிக்கு போகாததினால் இரவிரவா நாடகத் தொடரும் ... பேஸ்புக்கு மாக ... மேஞ்சு போட்டு படுக்க சமமாகிப் போகும். பேந்து விடிய விடிய படுத்துக் கிடப்பாள் சகுந்தலா . இப்ப அவள் வேலை இல்லாமல் வீட்டோடு தான். டென்மாக்கில் வீட்டோடு இருந்தாலும் அரசாங்கம் பணம் கொடுக்கும். அவள் வந்து கொஞ்சக்காலமாக வேலை செய்தவள். செய்து கொண்டிருக்கேக்க நாரியை பிடிச்சுப் போட்டுது என்று, ஒரு நாள் வேலைத் தளத்தில விழுந்தவள் தான் எழும்பவேயில்லை. மனைவியை அம்புலன்சில ... ஹோல்பேக் வைத்தியசாலைக்கு கொண்டுபோவதாக அறிவித்தல் வர துடிச்சுப் போன கணவன் சிவசாமி அலறியடித்துக் கொண்டு வைத்தியசாலைக்கு போனபோது, அரை மயக்கமாக கிடந்த சகுந்தலா கணவனின் குரல் கேட்டவுடன் கடைக் கண்ணை திறந்து கண்ணடித்தாள். அப்போதான் சிவசாமிக்கு நிம்மதியாக இருந்தது .

சிவசாமியும் சகுந்தலாவும் காதலித்து திருமணம் செய்தபடியினால் சகுந்தலாவின் கண்ணடிப்புக்களின் அர்த்தம் சிவசாமிக்கு விளங்கும். இரண்டு வயது சிவசாமியை விட சகுந்தலா மூப்பாக இருந்தாலும், பள்ளிக்கூடம் போகேக்க வரேக்க, கோவிலுக்கு போகேக்க வரேக்க சகுந்தலாவின் கண்ணடிப்புத்தான் சிவகாமியை நிலைகுலைய செய்தது. அவள் மீது காதல் கொள்ள வைத்தது .

அவளுடைய வயதையும், வறுமையையும் காட்டி சிவசாமி வீட்டில் எதிர்த்த போதும், அத்தனையையும் எதிர்த்து அவளைக் கூடிக்கொண்டு ஒருத்தருக்கும் தெரியாமல் அளவெட்டியில் போய் நண்பன் அழகேசன் வீட்டில் ஒளிந்திருந்து வாழ்வு தொடங்கியதும் இருபது வருடங்களுக்கு பின்னரும் தேனாக இனித்தது சிவசாமிக்கு மீண்டும் ஒரு தடவை எட்ட நின்று தன் காதல் மனைவியை அவதானித்தான் ...

டாக்குத்தரும் நேசும் அந்த வாட்டிலேயே நின்று கொண்டிருந்ததினால் நோயாளியைப் போலவே சுருண்டு படுத்திருந்தாள் சகுந்தலா! அன்று அவளை தூக்கிக் கொண்டு ஓடும் போது ஒற்றக் கையாலே தூக்கும் பலம் இருந்தது சிவசாமிக்கு ! அவளும் நாற்பது கிலோவுக்குள்ளே தான் இருந்திருப்பாள். சின்ன இடை, நளின நடை அழகிய காந்தக் கண்ணின் கடைக் கண் பார்வையில் தன்னையே இழந்த பொழுதுகளில் ... வறுமையான வாழ்வு கூட வசந்தமாக இனிக்க, மனதுக்குள் இன்ப நினைவுகள் பூத்தூவ, தன்னையே மறந்து கற்பனையில் நின்ற சிவசாமி டாக்குத்தரின் சத்தம் கேட்டு சுய நினைவுக்கு வந்தான் . இருபது கிலோவாக இருந்தவள் இந்த இருபது வருடத்தில் எண்பது கிலோவாக மாறியிருந்தாள் ... எத்தனை தரம் சிவசாமி சொன்னாலும் உணவு முறைகளில் கவனமில்லை சகுந்தலா தேகாப்பியாசம் செய்வது கிடையாது. எந்த நேரமும் அவளது வாய் வேலை செய்துகொண்டே இருக்கும். உடம்பு வேலை செய்யக் கள்ளம் ... தொடர்ந்தும் வீட்டில் நிரந்தரமாக இருப்பதற்காகத்தான் "இந்த நாரி நோ நாடகம் " என தனது மனதுக்குள் நொந்து கொண்டான் சிவசாமி . . நாலைஞ்சுநாட்கள் வைத்திய சாலையில் இருந்து, பின் வீடு வந்து ஆறுமாசம் மசாஷ் .. என அலைந்து திரிந்து, குடும்ப வைத்தியரின் புண்ணியத்தில தொடர்ந்து வீட்டிலேயே இருக்க , அரசாங்க பணம் கொடுப்பதாக தீர்ப்பு வந்த பிற்பாடுதான் சகுந்தலாவுக்கு நிம்மதி.

"உன்ர நடிப்பால நீ நடிகர் திலகத்தையும் வென்றிட்டாய் ஆனால், வீட்டுக்குள்ள இருந்திருந்து இன்னும் கள்ள உடம்பு வைச்சு ஒண்டுக்கும் பிரயோசனம் இல்லாமல் பூவரசம் குத்தியாக போகப் போகுது உன்ர உடம்பு என்றான் சிவசாமி"

"உங்களுக்கு எப்ப பார்த்தாலும் என்னை குறை சொல்வதே வேலையா போச்சுது. சொன்னாலும் விளங்காது இருபது வருசமா வேலை செய்து என்னத்தை கண்டியள் . சக்கை பிழி பிழிஞ்சு போட்டு தான் உங்களை வெளியே விடுவங்கள் வேலைத்தளத்தில... இப்படியேவேலையை கட்டிப்பிடித்து கொண்டு அழுங்கோ ! உங்களுக்கு வாழத் தெரியாது. இந்த நாட்டில நடிக்க தெரியவேணும். "என்றாள் சகுந்தலா."

அன்றில் இருந்து சகுந்தலாவும் தன் விருப்பப்படிதான் படுக்கை. இரவிரவாக இருந்து தொடர் நாடகங்களை பார்த்து விட்டு நேரம் சென்று படுக்கப் போனதால ... விடியக் காத்தால டெலிபோன் வந்து எழுப்பினது எரிச்சலாக இருந்தது அவளுக்கு. "சொல்லுங்கோ பிள்ளை என்ன ஏதேனும் அவசரமே" என்றாள் சகுந்தலா !

"ஓமக்கா செலவுக்கு காசுகள் இல்லை அதுதான் எடுத்தனான் "என்று அவள் சொன்னதன் தான் தாமதம்." என்ன பிள்ளை கதைக்கிறாய் ! இப்ப இரண்டு கிழமை தானே இருக்கும் ஒரு இலட்சம் அனுப்பி , அதுக்குள்ளே காசு கேட்டால் ஒரு மனச்சாட்சி வேண்டாமே"

" அம்மா என்ன அவ்வளவுக்கு சாப்பிடுகிற ஆளா ... "

அவ ஒரு நேரம் கஞ்சி குடிக்கிறதே பெரும் பாடு "பாவங்கள் அம்மாவையும் பாக்குதுகள் என்று , பார்த்துப் பாராமல் காசையும் அனுப்பி, வாடக்கையில்லாமல் வீட்டையும் உங்களிட்டை சும்மா இருக்கத் தந்தா எங்கட காசில நீங்கள் சுக போகம் அனுபவித்துக் கொடிருக்கிறியள போல..

"என்ர மனுஷன் வேலைக்கு போகிற காசிலதான் சோரோ கஞ்சியோ நாங்கள் சீவியம் நடத்துறம். முந்தி நான் பக்கத்தில தோட்ட வேலையளுக்கு கூலி வேலையளுக்கு போனனான். இப்ப, உங்கட அம்மாவோட எப்பவும் பக்கத்தில இருக்க வேணும் என்பதற்காகத்தான் நான் வேலைக்கு போறதில்லை. உங்கட அம்மாவுக்குத் தான் நேரத்துக்கு நேரம் பால், மா, பழங்கள், விதம் விதமான சாப்பாடுகள் செய்து கொடுக்கிறம். டாக்குத்தர் எழுதித் தருகிற மருந்துக்கே நிறையக் காசு செலவாகுது . உங்கட அம்மா படுத்த படுக்கையோடுதான் எல்லாமே நடக்குது .... அடிக்கடி அவவுக்கு இயலாமல் போவதால .. பெரிய ஆசுபத்திரியில வரிசையில நின்று காட்டிறத்துக்கே பெரும்பாடாக போய்விடும் . ஆட்டோவில கூட்டிக்கொண்டு போய் வருவதுக்கே கனக்க செலவாகுது ... " என, அடுக்கிக் கொண்டு போன குமுதினியை பாதியில் நிறுத்தி ...

"ஒக்கே பிள்ளை உங்களுக்கு கஸ்ரமேன்றால் விடுங்கோ இனி நீங்கள் அம்மாவை பார்க்க வேண்டாம். ஒரு கிழமைக்குள்ள நான் ரிக்கற் போட்டுக்கொண்டு நேர வாறன் . ஒரு மாச அவகாசமும் தாரன் அடுத்த மாசத்துக்குள்ள நீங்கள் வேற வீடு பார்த்துகொண்டு போங்கோ" என, கூறியபடி டெலிபோனை வைச்சாள் சகுந்தலா !

"விட விட இவையளுக்கு சேட்டை கூடிப் போச்சுது. வீடு வாசலில்லாமல் திரியுதுகள் என்று, எங்கட வீட்டில இருந்தால் அம்மாவுக்கும் உதவியாக இருக்குமென இருத்தினால், இப்ப எங்களுக்கே கணக்கு காட்ட வந்திட்டினம். இவயளுக்கு அனுப்பிற காசுக்கு அம்மாவை கொண்டு போய் எங்கயாவது வயோதிப மடத்தில விட்டாலும் பரவாயில்லை போல" என தனக்குத் தானே ... புறுபுறுத்துக் கொண்டாள் சகுந்தலா ..

வேலைக்கு நேரமாகிவிட்ட பதைப்போடு பாத்துறுமால் வெளியே வந்த சிவசாமியிடம் " இப்ப உடனடியா நான் ஊருக்கு போகவேணும் ரிக்கர் ஒண்டு பாருங்கோ". என்றாள்.

"என்னப்பா ! விடிஞ்சதும் விடியாததுமாக புறுபுறுத்துக் கொண்டு நிற்கிறாய் ? உன்னால நாட்டுக்கும் பிரயோசனமில்லை வீட்டுக்கும் பிரயோசனமில்லை .... போய் ஒரு தேத்தண்ணி போடு" என , தான் வேலைக்கு போற ஆயத்தத்தில கவனமானான்."ஓ ...... இனி சொல்லுவியள் தானே என்ர நாரி போனதே உங்களால தான் " என்றாள் சகுந்தலா.

"எல்லாம் முடிஞ்சு இப்ப என்னில வந்திட்டியே ? நான் என்ன டென்மார்க் அரசாங்கமே உன்ர கதையை நம்பிறத்துக்கு, நீ அரசாங்கத்துக்கு நடிச்சு நடிச்சு உண்மையில சுகையீன மான ஆளைப் போலவே வந்திட்டாய்"

"காத்தால எழும்பினால் என்ன பிரச்சனை எடுக்கலாம் எண்டு நினைச்சுக்கொண்டு தான் எழும்பிறனி போல" என்று சொல்லியபடி தன் ஒற்றைக் காலை மற்றக் காலின் மேல் வைச்சு "சொக்சை" காலுக்குள் மாட்டிகொண்டிருந்தான் சிவசாமி. "எனக்கு வாச்ச புருசனும் சரியில்லை வந்த சொந்தமும் சரியில்லை" என்று சொல்லியபடி சுடச் சுட ரீயை. ரீப்போ வின் மேலே வைச்சுவிட்டு, பாத்துருமுக்குள் நுழைந்தாள் சகுந்தலா.

தன் கதவை திறந்து கொண்டு வெளியே வந்த யூலி "விடியக் காத்தால படுக்க வழியில்லாமல் கிடக்குது. ஏன் இரண்டு பேரும் கலவாக் குருவி போல கத்திக்கொண்டு இருக்கிறியள் ? வெளில எங்கயாவது வீடு பார்த்துக் கொண்டு போறன் என்றாலும் விடுகிறியள் இல்லை என்று, சொல்லியவாறு" மீண்டும் கதவை அடிச்சு சாத்திவிட்டு அறைக்குள் போய் படுத்துவிட்டாள் .

"ஜக்கேற்றை" எடுத்து மாட்டிக்கொண்டு கார் சாவியை எடுத்துக் கொண்டு சிவசாமி வெளிக்கிட , "இஞ்சரப்ப ! உங்களைதான் " என்று சகுந்தலா குரல் கொடுக்க ..

என்னப்பா வேலைக்கு வெளிக்கிட பிறத்தல கூப்பிடுகிறாய் ? என்று கோபத்தோடு கார் திறப்பையும் மேசை மேல எறிஞ்சு போட்டு, சொபவில போய் அமர்ந்தார் சிவசாமி

"உதில நாலு நிமிசத்தில கார் ஓடி போற வேலைக்கு பெரிய பந்தா காட்டிறியள். "சிவசாமி முழுவியளம் பார்ப்பதில முதல் நம்பர். யாரும் இப்படி பிறத்தால கூப்பிட்டா ஒரு ஐந்து நிமிஷம் போய் ஓரிடத்தில் இருந்து விட்டுத் தான் அடுத்த வேலை பார்ப்பார். அதனாலோ என்னவோ வேலை தொடங்குவதற்கு அரை மணி நேரம் முன்னமே உசாராகி விடுவார் .

ஓரிரு நிமிஷம் கழிச்சு, "ஏனிப்ப கூப்பிட்டனி" என சிவசாமி கேட்க , "அம்மாவை இஞ்ச கூப்பிடப் போகிறன்" என்றாள் சகுந்தலா ! "இந்த வயசு போன நேரத்தில அவவை இஞ்ச கூப்பிட்டு கஸ்ரப்படுத்தப் போகிறியோ ? அதுகள் வடிவா பார்க்குதுகள் தானே ..உன்னையே இஞ்ச பார்க்க இரண்டு பேர் வேணும் இதுக்குள்ள அவவும் வந்தால்" ஒன்றுமே புரியாமல் விழி பிதுங்கி நின்றார் சிவசாமி .

ஏனென்றால் சகுந்தலாவின் சுய ரூபம் சிவசாமிக்கு தெரியும். ஒன்றை முடிவெடுத்தால் தான் நினைச்சாலும் மாற்றமாட்டாத சுபாவம். தான் பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என்பது தான் அவள் வாதம் .

"என்ன கதைக்கிறியள் நீங்கள் ? உங்களுக்கு தெரியாது அவையளின்ர குணம். மாசா மாசம் அம்மாவிற்காக ஒரு இலட்சம் அனுப்பியும் போதாதாம் அவைக்கு, இப்ப விடியக் காத்தால அவள் வாசுகி டெலிபோன் அடிச்சிட்டாள். அவவுக்கு எழும்பெலாதம் , நடக்கேலாதாம், படுக்கையோடுதான் எல்லாமாம். இவவால தான் அவ வேலைக்கு போக இயலாமல் கிடக்காம் ... காசுக்காக இல்லாது பொல்லாது எல்லாம் சொல்லிக் கொண்டு நிக்கிறாள் " என்றாள் சகுந்தலா.

"அவையள வார மாசம் வீட்டை விட்டு எழும்பச் சொல்லி போட்டன்" என சகுந்தலா முடிக்க முன்னம், "அப்ப மாமியை யார் பார்க்கிறது?" என்றான் சிவசாமி.

"அம்மாவை நான் இஞ்ச பொன்சரில கூப்பிடப் போறான்" . என்று சகுந்தால முடிக்க முன்னம் கூப்பிட்டிட்டு என்றான் சிவசாமி . "இஞ்ச அகதியாக பதிஞ்சு விட்டால் அம்மாவுக்கு அம்மா ! காசுக்கு காசு ! "என்ற சகுந்தலா." அதுதான் இப்ப ஊருக்கு போக ரிக்கர் போடச் சொன்னனான். என்றவுடன், " என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சுவர் கடிகாரத்தையே பார்த்துக் கொண்டு நின்ற சிவசாமி அதன் பெரிய முள் இருபது நிமிடம் சுத்தியதே தெரியாமல் மலைச்சுப் போய் நின்றவர் "அவசரமாய் எழுந்து எதுவுமே பேசாமல் மீண்டும் மேசை மேலே கிடந்த தன் கார்ச் சாவியை எடுத்துக் கொண்டு கதவை திறக்க ...

"அப்பா ! " என்று கத்திக்கொண்டு ஓடி வந்த யூலி "இந்தாங்கோ .... டெலிபோன் " என்றாள். மீண்டும் முழுவியளம் பிழைச்சு போச்சுதே என்று தனக்குள்ளே நினைசுக் கொண்டு திரும்பிய சிவசாமிக்கு அவளின் படபடப்பு ஏதோ விபரிதம் நடந்து விட்டது என்பதை உணர்த்தியது . சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் அவள் "அம்மம் மா ......... " என்றபடி "டெலிபோனை சிவசாமியிடம் கொடுத்தாள்.

டெலிபோன் யாழ்ப்பாணத்தில் இருந்து தான் வந்திருந்தது. அவன் டெலிபோனை வாங்கிக் கதைப்பதற்குள் சகுந்தலாவிடம் யூலி சொல்லியிருக்க வேணும் சகுந்தலா கத்திக் கொண்டு மயங்கி விழுந்தாள்.

"ஐயோ ... என்ர அம்மாவை கொண்டிட்டான்கள் ... "

மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு போன் எடுத்த சிவசாமி "உங்களுக்கு தெரியும் தானே தற்போதைய சூழ்நிலை நாங்கள் வர முடியாத நிலை.. நீங்கள் தான் பிள்ளைகள் போல நின்று எல்லாக் காரியமும் செய்து முடிக்கவேணும்.

எவ்வளவு செலவு முடிஞ்சாலும் .... என்பதற்கு முன் .. "பணமொன்றும் நீங்கள் இஞ்ச அனுப்பத் தேவையில்லை ஐயா ! நாங்கள் கஸ்ரபட்டாலும் மானத்தோடதான் வாழ விரும்பிறம். பெற்றால் தான் அவ எங்க தாயில்ல .. நாங்களும் தாய் மாதிரித்தான் அவவை வைச்சு பார்த்தனாங்கள். அது போதும் எங்களுக்கு , ஒரு பிள்ளையின் ஸ்தானத்தில் நின்று அவவின்ர கடமையெல்லாம் முடிச்சு, உங்களுக்கு வேணுமென்றால் சாம்பலை அனுப்பி வைக்கிறம். காசியில கொண்டேக் கரைச்சு புண்ணியத்தை தேடிக்கொள்ளுங்கோ ! அவவின்ர எல்லாக் கடமையும் முடிச்சு உங்கட விருப்பபடி அடுத்த மாசம் நாங்க இந்த வீட்டை விட்டு வெளியேறுகிறம்" என சொல்லியபடி இவரின் பதிலுக்கு காத்திராமல் டெலிபோனை துண்டித்து கொண்டான் வாசுகியின் கணவன் மணி.



# விண்வெளிக் குப்பையும் வெப்ப சலனமும்


ஐவி. நாகராஜன்

பூமியிலிருந்து விண்ணில் ஏவப்படும் செயற்கைக்கோள்கள் தமது பணியை முடித்ததற்கு பிறகு தனித்து விடப்படும். ஆனாலும் அவை தொடர்ந்து விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கும். அதே நேரத்தில் செயற்கைகோள்களை தூக்கி செல்லும் ராக்கெட்டுகளின் பாகங்களும் விண்வெளியில் ஆங்காங்கு மிதந்து சென்று கொண்டிருக்கும். மொத்தத்தில் விண்வெளியையும் மனிதர்கள் குப்பையாக்கி வைத்திருக்கிறார்கள் என்பது நிதர்சனம்.

பலநூறு கிலோ மீட்டர் வேகத்தில் விண்வெளியில் மிதந்து செல்லும் இந்தக் குப்பைகள் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் செயற்கைகோள் மீது மோதி பெரும் சேதத்தை ஏற்படுத்தும். பூமியை சுற்றி 21,900-க்கும் மேற்பட்ட பொருள்கள் மிதந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இதில் சுமார் 4,450 பொருள்கள் மட்டுமே செயல்படும் செயற்கை கோள்களாகும். மற்றவை எல்லாம் உடைந்த செயற்கை கோள்கள், ஏவுகணைகளின் பாகங்கள் என்று கடந்த ஆண்டு வெளியான புள்ளிவிவரம் ஒன்று தெரிவிக்கிறது.

இவை தவிர, விண்வெளியில் மிதக்கும் மிகச் சிறியது முதல் 10 செ.மீ வரையிலான துகள்களின் பட்டியல் தனியாக உள்ளது என்பதும் குறிப்படத்தக்கது. பொதுவாக விண்வெளிக் குப்பைகளுக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்று விஞ்ஞானிகள் ஆய்வு செய்து தெரிவித்துள்ளனர். தான் உண்டு தன் வேலை உண்டு என இருக்கும் செயற்கை கோள்களின் முதல் எதிரி இந்த விண்வெளிக் குப்பைகள்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதனால் உலக நாடுகளுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக விஞ்ஞானிகள் உறுதிபடத் தெரிவிக்கின்றனர்.

விண்வெளிக் குப்பைகளிடமிருந்து தப்பிக்க செயற்கைக்கோள்களில் கவச அமைப்பு ஏற்படுத்தப்பட்டாலும் அதையும் தாண்டி சிறிய துகள்களால் பாதிப்பு ஏற்படுகிறது. தொடர்ந்து விண்வெளிக் குப்பைகள் பற்றி ஆய்வு செய்து வரும் நாசா விஞ்ஞானிகள், ஒவ்வொரு நாளும் அதன் நடவடிக்கைகளை கண்காணித்து வருகின்றனர். மொத்தத்தில் அளவில் பெரிய விண்வெளிக் குப்பைகள் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருக்கும். அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகியவை விண்வெளியில் அதிக குப்பைகளை கொட்டிய முதல் மூன்று நாடுகள் ஆகும்.



2109-ஆம் ஆண்டு செயற்கைக்கோள் எதிர்ப்பு ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது இந்தியா. இதற்கு ‘மிஷன் சக்தி’ என்று பெயரிடப்பட்டது. இதன் மூலம் செயற்கைக்கோள் எதிர்ப்பு ஏவுகணை வைத்துள்ள நான்காவது நாடானது இந்தியா. போர் சூழல்களில் எதிரி நாடுகள் செயற்கைக்கோள் மூலம் நிலப்பரப்புகளை கண்காணிப்பதை இந்த ஏவுகணை மூலம் தடுக்க முடியும். செயற்கைக்கோள் எதிர்ப்பு ஏவுகணை என்பது விண்வெளிக் குப்பையை மேலும் அதிகப்படுத்தலாம். அதே நேரத்தில் விண்ணில் செயற்கைக்கோள் ஒன்றை அழிக்கும் வகையிலான சோதனைக்கு எதிர்ப்பும் கிளம்பியது.

ஆனால் இந்தியா சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்தது. அதற்கு முன்புவரை 115 என்ற எண்ணிக்கையிலிருந்து இந்தியாவின் விண்வெளிக் குப்பை அளவு, மேற்கண்ட ஏவுகணை சோதனையால் 160 ஆக உயர்ந்தது. இந்நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியாவின் விண்வெளிக் குப்பைகள் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்து அழிவை ஏற்படுத்தியுள்ளன. ஏவுகணை சோதனைக்கு முந்தைய அளவைவிட தற்போது அதிக அளவில் இந்தியாவின் விண்வெளிக் குப்பைகள் மிதந்து கொண்டிருக்கின்றன என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் புள்ளிவிவரப்படி கடந்த 15 ஆண்டுகளில் 12 ஆண்டுகளின் கோடைக்காலம் மிக கடுமையானதாக இருந்துள்ளது என்று கணிக்கப்பட்டுள்ளது. கோடை நாட்களின் அதிகரிப்பும் வெப்பத்தின் அளவும் ஒவ்வொரு ஆண்டும் கூடிக்கொண்டே செல்கிறது. கடந்த மார்ச் மாதம் இந்தியாவின் வடமேற்கு, மத்திய, கிழக்குப் பகுதிகளில் கோடை வெயில் அதிகமாக இருந்தது.

ஏப்ரல் மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து 4.5 முதல் 8.5 செல்சியஸ் வெப்பம் அதிகரித்தது. ஏப்ரல் 27-ந் தேதி இந்தியாவிலேயே அதிக வெப்பம் உத்தர பிரதேச மாநிலம் பிரயாக் ராஜில் 45.9 செல்சியஸ் பதிவானது. அதற்கு முந்தைய நாள் ராஜஸ்தானில் பார்மர் என்ற இடத்தில் 45.1 செல்சியஸ் வெப்பம் பதிவானது. இந்தியாவில் பல நகரங்களில் பரவலாக 42 முதல் 44 செல்சியஸ் வெப்பம் நிலவியது.

பிரயாக் ராஜில் 45.9 செல்சியஸ் பதிவான நாளில் பூமியின் மீது நிலவிய வெப்பக்காற்று சலனத்தின் மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி வரைபடம் நிலப்பரப்பிலிருந்து 2 மீட்டர் உயரத்திற்கு நிலவிய வெப்ப சலனத்தை காட்சிப்படுத்துகிறது. இந்தியர்கள் எல்லோருமே நெருப்பாற்றில் நீந்துகிறார்கள் என்றால் அது மிகையில்லை.

அதிக அனல் காற்று வீசும்போது அதன் தாக்கம் ‘சன் ஸ்ட்ரோக்’ உள்ளிட்ட உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்துவடன் முடிந்து போவதில்லை. காற்றின் தரம் குறைகிறது. மழை வாய்ப்பைத் தடுக்கிறது. வேளாண் விளைச்சலைக் குறைத்து விடுகிறது. இவை மட்டுமல்ல, நகர்ப்புறங்களில் மின்தேவை அதிகரிக்கிறது. அதற்கேற்ப மின் உற்பத்தியை உடனே அதிகரிப்பது எளிதல்ல. தேவையான நிலக்கரி உடனடியாக கிடைப்பதில்லை. இந்தியாவில் கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மின்பற்றாக்குறை இந்த ஆண்டில் காணப்படுகிறது.

இவற்றுடன் புவி வெப்பமயத்தின் தாக்கத்தால் உத்தரகண்ட், ஹிமாசல பிரதேச மலைகளில் பனி உருகுவதும் அதிகரித்துள்ளது. அதிகபட்ச வெப்பம் நிலவிய ஏப்ரல் 27-ஆம் திகதி இந்தியாவில் 300இற்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டதாக மத்திய வனத்துறை அறிக்கை கூறுகிறது. இதில் 30 சதவிகித காடுகள் உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ளவை.

வானிலையின் மாறுபாடுகளால் வெப்பக்காற்று வெளியேற வழியின்றி மேற்பரப்பிலேயே தங்குவதால் இரவு முழுவதும் லேசான வெப்பம் தொடர்கிறது. குறைந்துவரும் விண்வெளிக் குப்பைகளை மேலும் குறைப்பதற்கும் அதிகரிக்கும் வெப்ப சலனத்தை கட்டுப்படுத்துவதற்கும் அறிவியல் ரீதியான அணுகுமுறைகள் குறித்து அரசுகள் பரிசீலிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். •



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15


27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4

31. 


ஆகுமெனில் 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

## கல்வி tv CHANNEL-1

**08.05.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**08.05.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பொலிஸ்மா அதிபர் பதவி விலகவேண்டும்

## சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே. 15

"பொலிஸ்மா அதிபர் பதவி விலகவேண்டும் என்று ஏற்கனவே வலியுறுத்தியிருந்தேன். அவர் பதவி விலகுவது மாத்திரமின்றி, கொள்ளைக்காரர்களைக் கைதுசெய்யாமைக்காக அவர் கைதுசெய்யப்படவும் வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றிலேயே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார். (அ)

# இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு அபாயம்!

கொழும்பு, மே. 18

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழை தொடர்ந்தால் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களு கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் அதனை அண்டிய மில்லனிய, மதுராவளை மற்றும் ஹொரணை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பணிப்பாளர் பொறியியலாளர் எஸ். பீ. சி. சுஜீஸ்வர தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் நெலுவ, தவலம, நாகொட, வெலிவிட்டிய திவ்துர மற்றும் பத்தேகம பிரதேச செயலகப் பிரிவுகளில் தாழ்வான பகுதிகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து மழை பெய்தால் ஆற்றின் இருபுறமும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது .

இதனால் இப்பகுதியிலுள்ள மக்கள் பாதுகாப்பான இடத்திற்குச் செல்வதற்கு தயாராக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(அ)

# ஒரே இரவில் இலங்கையில் 2 ஆயிரம் கோடி ரூபா இழப்பு!

கொழும்பு, மே. 15

இலங்கையில் ஏற்பட்ட வன்முறையின்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல்வாதிகளினது வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமாக்கப்பட்டதால், சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், காப்புறுதி செய்யப்பட்ட சொத்துகளுக்காக நஷ்ட ஈடு வழங்குவதற்கு ஒரே முறையில் பெருந்தொகையான நிதி தேவைப்படுவதால், காப்புறுதி நிறுவனங்களும் பெரும் பிரச்னைகளுக்கு முகம் கொடுத்துள்ளன.

கடந்த வாரம் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களின் பின்னர் 55 அமைச்சர்கள் அரசியல்வாதிகளின் வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவங்களில் 200க்கும் அதிகமான வாகனங்கள் தீ இடப்பட்டுள்ளதாகவும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்துக்கு வந்த பிரதிநிதிகள் மற்றும் ஆதரவாளர்களை அழைத்து வந்த 40 பஸ்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு சொந்தமானது என கூறப்படும் மல்வானை பிரதேசத்திலுள்ள சொகுசு வீடு தீயிடப்பட்டதால் 200 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# அனுரவை சந்தித்த அமெரிக்க தூதுவர்!

கொழும்பு, மே. 15

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தும் கலந்து கொண்டார்.

அமெரிக்கத் தூதுவர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணிக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பல விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து இரு தரப்பினரும் கருத்துகளை பரிமாறிக் கொண்டுள்ளனர்.

(அ)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா செல்லையா



**தோற்றம்**
**20 - 03 - 1931**

**மறைவு**
**12 - 05 - 2022**

யாழ். அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும், கனடா Torontoவை வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா செல்லையா 12-05-2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.அன்னார், காலஞ்சென்ற செல்லையா அவர்களின் அன்பு மனைவியும்,இந்திராணி, ஜெயராணி, சிவேந்திரன்(அப்பன்), றஞ்சினி(பேபி), சிவபாலன்(சிவா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்ற சிவகுமாரன், தேவரஞ்சன், குகப்பிரியா, இராமநாதன், காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியும்,செந்தில்குமாரன் – ஜனா, லதானி– பிரசன்னா, லஜிதா– பிறையின், ஆர்த்திகா– தசாந், நிதுசா– மௌளிசன், கபிலன், நிலானி, நர்த்தனன், கிசோன், சஞ்ஜே, அருள்ராஜ், ரகுராஜ், சிவராஜ் ஆகியோரின் அன்புப் பேத்தியும்,கோபி, ஜெசி, அர்யுன், லலிதா, லியா, கயிலன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான ஐயத்துரை, கனகலிங்கம் மற்றும் நல்லம்மா, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பழனித்துரை, தங்கம், தையல்நாயகி, ஜெகநாதன், வைத்தியலிங்கம் மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Tuesday, 17 May 2022 5:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*பார்வைக்கு :*
Wednesday, 18 May 2022 11:00 AM - 11:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை :*
Wednesday, 18 May 2022 11:30 AM - 1:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம் :*
Wednesday, 18 May 2022 1:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**இந்திராணி - மகள்**
**Mobile : +16475046514**
**ஜெயராணி - மகள்**
**Mobile : +16475186991**
**சிவேந்திரன்(அப்பன்) - மகன்**
**Mobile : +16478293944**
**றஞ்சினி(பேபி) - மகள்**
**Mobile : +19056027873**
**சிவபாலன்(சிவா) - மகன்**
**Mobile : +14168321548**

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**அன்னை மடியில்**
**15 - 10 - 1955**



**ஆண்டவன் அடியில்**
**13 - 05 - 2022**

## திருமதி விமலாதேவி தங்கலிங்கம்

யாழ். உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கணேசபுரம், ஸ்பெயின் ஆயனசனை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட விமலாதேவி தங்கலிங்கம் அவர்கள் 13-05-2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தங்கராசாப் பத்தர்(உடுப்பிட்டி), கனகாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இராசையாப் பத்தர்(வரணி), இராசலெட்சுமி தம்பதி களின் அருமை மருமகளும், தங்கலிங்கம்(ஸ்பெயின்) அவர்களின் அன்பு மனைவியும்,தர்மானந்த(ஸ்பெயின்), அனுஸ்பிரியா(பிரான்ஸ்), திஷாந்த் (ஸ்பெயின்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தமிழ்ப்பிரியா(கனடா), சுதாந்தன் (பிரான்ஸ்), உமாஜனி(இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஆறுமுகானந்த ஈஸ்வரன், தவமணிதேவி, தவேஸ்வரன், விமலேஸ்வரன், விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற தங்கேஸ்வரன், சசிகலாதேவி, இராஜேஸ்வரன், இரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,கமலேஸ்வரி(கனடா), திலகேஸ்வரி(இங்கிலாந்து), ஈஸ்வரலிங்கம்(இலங்கை), கணேசலிங்கம்(கனடா), இராஜலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சுபிக்ஷா, ஆதீஷா, ஆதீஷன், சக்திஷா(பிரான்ஸ்), குட்டி விமலா(இலங்கை) ஆகியோரின் அருமைப் பேத்தியும் ஆவார்.

*அஞ்சலி :*
Sunday, 15 May 2022 8:00 AM - 10:30 AM
Chapel of Saint Isidore at the Funeral Home C. de los Comuneros de Castilla, 15, 28019 Madrid, Spain.

*தகனம் :*
Sunday, 15 May 2022 10:30 AM
Chapel of Saint Isidore at the Funeral Home C. de los Comuneros de Castilla, 15, 28019 Madrid, Spain.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**தங்கலிங்கம் - கணவர்**
**Mobile : +34612246246**
**தர்மானந்த - மகன்**
**Mobile : +34612200002**
**அனுஸ்பிரியா - மகள்**
**Mobile : +33605909216**
**திஷாந்த் - மகன்**
**Mobile : +34632166666**

தகவல்:
**குடும்பத்தினர்**

ஈழநாடு
Eelanadu

# வீட்டை இழந்த எம்.பிக்களுக்கு உடனடியாக தற்காலிக வீடுகள்

## ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு

கொழும்பு, மே. 15

வன்முறை காரணமாக வீடுகளை இழந்து இடம் பெயர்ந்து வாழும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலவத்துகொட வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளை தற்காலிகமாக வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அண்மைய நாட்களில் 55 எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களின் வீடுகள் வன்முறையாளர்களால் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் மேலதிகமாக 06 மெய்ப்பாது காவலர்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (அ)




# வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கென தனி நிர்வாக கட்டமைப்பு அவசியம்

## உதவி வழங்கும் நாடுகளை இணைத்து உருவாக்கவேண்டும் என்கிறார் சிறிதரன்



கிளிநொச்சி, மே. 15

**இந்தியாவின் கூடுதலான கரிசனையிலும், உதவி வழங்கும் நாடுகளையும் இணைத்து வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான தனி நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் வடக்கு-கிழக்கின் அபிவிருத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பரசியல் பாதிப்படைய செய்யுமல்லவா எனவும், அதற்கான மாற்று திட்டங்கள் உள்ளதா எனவும் ஊடகவியலாளர் அவரிடம் வினவிய போது இவ்விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் நடந்து 30 ஆண்டுகள் அதற்கு பின்னர் 12 ஆண்டுகள் கடந்து 42 ஆண்டுகள் இந்த மண்ணிலே கடந்திருக்கின்றது. ஆனால் வடக்கு-கிழக்கில் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இளைஞர்களுக்கான தொழில்வாய்ப்பு உள்ளிட்டவை குறைந்திருக்கின்றன.

இதற்கான வாய்ப்பாக வடக்கு-கிழக்கு இணைந்த வகையில் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவது காலத்திற்கு பொருத்தமானது என கருதுகின்றோம்.

இப்பொழுது இருக்கின்ற சூழல் இலங்கையின் அரசியலமைப்புக்குள் இந்தியாவின் கூடுதலான கரிசனையில் உதவி வழங்கும் நாடுகளையும் சேர்த்துக்கொண்டால் வடக்கு-கிழக்குக்கான தனி கட்டமைப்பை உருவாக்க முடியும்.

யுத்த காலத்தில் தென்னிலங்கையில் தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு அங்கு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதற்கான வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது. காரணம் யுத்தம். இதனை நிமிர்த்துவதற்கான ஒரு வழியாக இந்த இடைக்கால நிர்வாகத்தினை நாங்கள் பார்க்கின்றோம். இதன் ஊடாக நாட்டுக்கு நிதியை கொண்டுவர முடியும்.

குறிப்பாக உலக நாடுகளின் நிதி, இந்தியாவின் நேரடி கண்காணிப்பில் முதலீடுகளை கொண்டு வருதல், இந்தியாவின் மேற்பார்வையில் கொண்டு வருவதன் ஊடாக பல சலுகைகளையும் எதிர்பார்க்கலாம்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களின் முதலீடுகளை வடக்கு-கிழக்கில் அதிகரிப்பதன் மூலம் தொழில் துறைகளை இயக்க முடியும். -என்றார். (அ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
27
-
03
-
1950



உதிர்வு
14
-
05
-
2022

## இராசதுரை யோகேந்திரன்

மானிப்பாய் ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் 82/15, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை யோகேந்திரன் நேற்று (14.05.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை – அரியமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் மருமகனும் சறோஜினிதேவியின் (கிளி) பாசமிகு கணவரும் அனோஜன், காலஞ்சென்ற தசந்தன் மற்றும் டிக்சன், சுகன்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசேந்திரன், காலஞ்சென்ற இராசாம்பிகை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2022) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.82/15, பருத்தித்துறை வீதி,**
**3ஆம் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 076 656 6823**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# பணம் அச்சிடாவிடில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்படும்!

## பிரதமர் ரணில் எச்சரிக்கை

கொழும்பு, மே. 15

பணத்தை அச்சிடவில்லை என்றால் அரச ஊழியர்களுக்கு ஊதியத்தை செலுத்த முடியாமல் போகும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பீ.பீ.சி சிங்கள சேவைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பணத்தை அச்சிடுவது எனது கொள்கை இல்லை என்றாலும் பணத்தை அச்சிட நேரிடும். பணத்தை அச்சிடவில்லை என்றால், அரச ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்க முடியாது.

மிக உக்கிரமான பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்நோக்கி வருகின்றோம். ஆங்கிலேயர்கள் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் கூட இவ்வாறான பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருக்காது என நான் நினைக்கின்றேன்.

இந்த ஆண்டே எமக்கு மிகவும் கடினமான ஆண்டு. அந்நிய செலாவணி இல்லை. அரசாங்கத்துக்கு வருமானம் கிடையாது. அந்நிய செலாவணியுடன் வர்த்தகங்கள் நடக்கவில்லை என்றால், வருமானம் குறையும்.

ரூபாய் மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அந்நிய செலாவணியுடன் வர்த்தகம் செய்யவில்லை என்றால், வரியை செலுத்த முடியாது. வரி குறைக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிடும். அந்நிய செலாவணி நெருக்கடியால், ரூபாய் கிடைக்கும் வருமானமும் கிடைப்பதில்லை. தற்போதைய நிலைமையில் சுமார் மூன்று பில்லியன் டொலர்கள் வரை தேவைப்படுகிறது.

இதனை பெற்றுக்கொள்வதே எமக்கு இருக்கும் முதலாவது சவால். அதனை பெற்றுக்கொள்ளவே நான் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

நாட்டில் வரிசைகளை இல்லாமல் செய்ய வேண்டும். சாதாரண இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும். மக்கள் மூன்று வேளையும் சாப்பிட வழியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

நடுத்தர வகுப்பு மக்களை முன்னேற்றவேண்டும். உழைக்கும் மக்களின் வீடுகளுக்கு சிறந்த பொருளாதாரத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு வரிசையில் நிற்கும் யுகத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

1977 ஆம் ஆண்டு நாங்கள் இப்படியான வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம். திறந்த பொருளாதார கொள்கையை நடைமுறைப்படுத்தினோம். மின்சாரம் இன்றி 2001 ஆம் ஆண்டு எமக்கு இருண்ட யுகமாக இருந்தது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. அவற்றையும் நான் முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை முன்நோக்கி இட்டுச் சென்றேன். 2015 ஆம் ஆண்டும் நாம் பெரும் பொருளாதார பிரச்சினைகளை எதிர் நோக்க நேரிட்டது. பொருளாதார வீழ்ச்சியை தடுக்கும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக செய்தோம்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பினோம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிரச்னைகளுக்கு தீர்வு கண்டுள்ளோம்.

நான் பிரதமராக பதவியேற்ற காலங்களில் மூன்று வேளையும் மக்களுக்கு சாப்பிடும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தேன். சிறப்பாக வாழ வழியை உருவாக்கினேன்.

தொழில் வாய்ப்புகளை உருவாக்கினேன். தற்போது இந்த சவாலை ஏற்று மக்களுக்கு சிறந்த வாழ்க்கை ஏற்படுத்திக்கொடுக்க நான் எதிர்பார்த்துள்ளேன்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இல்லாவிட்டாலும் இவற்றை செய்ய முடியும். இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலும் 1939 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நான்கு உறுப்பினர்களே இருந்தனர். எனினும் பிரதமராக பதவியேற்று போரையும் வென்றார்-என்றார். (அ)

# மாமரத்திலிருந்து தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் பரிதாப மரணம்!

யாழ்ப்பாணம், மே. 15

யாழ்ப்பாணத்தில் மாமரத்தில் ஏறி கொப்பு வெட்டியவர் தவறி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மானிப்பாய், சங்குவேலி தெற்கைச் சேர்ந்த நாகேந்திரம் நகுலேந்திரன் (வயது- 48) என்ற 6 பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார். மாமரத்தில் 25 அடி உயரத்தில் ஏறி கொப்பு வெட்டும்போது அவர் நின்ற கொப்பு முறிந்ததால் தவறி வீழ்ந்துள்ளார்.

கீழே வீழ்ந்து சுயநினைவற்றுக் காணப்பட்ட அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தபோதும் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.


யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-அருள்
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்



**இரவு**
07.00 மணி : SPOTLIGHT
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :டான் பட்டிமன்றம்



10.00 மணி:-நேர்கொண்ட பார்வை

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**சிவி**

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK



## இலங்கையில்...

னாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

தீவிரமான வன்முறைப் போராட்டங்களுக்கு மத்தியில் நாடு இரண்டு முறை அவசரநிலையை அறிவித்துள்ள நிலையில், பன்னாட்டுத் தொடர்புகளைக் கொண்ட இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்தோரில் சில பிரிவினர், போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்து வரும் மோதல்களில் தங்கள் இருப்பை "உணர்ந்த" முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்தன.

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18ஆம் திகதியை சில குழுக்கள் தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அனுசரிக்க தாக்குதல்களை திட்டமிடுவது மட்டுமின்றி, தமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா மற்றும் பலர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கவும் முன்னாள் புலிகள் சதித்திட்டம் தீட்டினர்.

உளவுத்துறை உள்ளீடுகளை மேற்கோள் காட்டி ஆதாரங்கள், இலங்கையில் தங்கள் மோசமான திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்காக சில முன்னாள் போராளிகள் தமிழ்நாட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

கடலோர மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட மாநில புலனாய்வு மற்றும் உள்ளூர் பொலிஸ் சிறப்புக் குழுக்கள், மாநிலத்தில் 1,000 கிமீ கடற்கரையோரத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

தமிழக பொலிஸின் கடலோரப் பாதுகாப்புக் குழு கடல் எல்லையில் ரோந்துப் பணியை அதிகப்படுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு ஆபத்து காரணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், ஆழ்கடலிலும், சர்வதேச கடல் எல்லைக் கோட்டிலும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கை அல்லது நபர்களை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டது.

இலங்கை குடிமக்கள் இந்தியாவுக்குள் ஊடுருவுவதைத் தடுக்குமாறு கரையோரப் பாதுகாப்பு நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், கடலுக்குச் செல்லும் அனைத்து வீதிகளிலும் வாகனச் சோதனையை தீவிரப்படுத்துவதற்காக அனைத்து கடலோர மாவட்டங்களின் பொலிஸ் அத்தியட்சகர்களும் சோதனைச் சாவடிகளை பலப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது அதன் முன்னாள் போராளிகளின் செயற்பாடுகளை சமீப வருடங்களாக தமிழ்நாடு அவதானித்து வருகின்றது.

கடந்த ஆண்டு, தேசிய புலனாய்வு முகாமை, சர்வதேச தொடர்புகளுடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் புலிகளின் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் செயற்பாட்டாளரான சபேசன் என்ற சற்குணம் என்பவரை கைது செய்தது மற்றும் இலங்கையில் அமைப்பை புத்துயிர் பெற நிதி திரட்டியது.

மற்றொரு வழக்கில், செயலற்ற வங்கிக் கணக்கில் கிடக்கும் பெரும் தொகையை மோசடியான முறையில் எடுக்க மும்பை சென்ற பெண் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். விசாரணையில், இலங்கையில் விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சிக்காக நிதி திரட்டும் பணிக்காக அவர் நியமிக்கப்பட்டார் என்பது தெரியவந்தது- என்றுள்ளது. (அ)

## முள்ளிவாய்க்கால்...

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 18 ஆம் நாளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்காலில் ஆயுதப் படையினரால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை கூட்டாக நினைவு கூர்ந்து அஞ்சலி செய்வது தாங்கள் நன்றாக அறிந்ததே.

இந்துக்கள் மற்றும் பௌத்தர்கள் என்ற வகையில் வன்முறையால் கொல்லப்பட்ட ஆன்மாக்களின் சாபம் பற்றி நாம் அறிவோம்.

இந்த நாட்டை இந்த ஆன்மாக்களின் சாபம் சுற்றி அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவது தெளிவானது. கர்மவினையின் தாக்கங்களே இந்த நாட்டை தாக்குகின்றது என்பதும் தெளிவு.

இந்த ஆன்மாக்களை நினைவு கூர்ந்து பிரார்த்தனை செய்வதால் அவை அமைதி பெறுகின்றன என்பது எமது சமய நம்பிக்கையாகும்.

இறுதியாக படுகொலை இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் மேற் குறிப்பிட்டவாறு மரணித்த ஆன்மாக்களுக்கு அமைதியான முறையில் 18.05.2022 ஆம் திகதி அஞ்சலி மற்றும் பிரார்த்தனை செய்ய தமிழ் மக்கள் மிகவும் தீர்மானமாக உள்ளனர்.

எனினும், முல்லைத்தீவு பொலிஸார் இதனை தடை செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை கவலைக்குரியது. இது மிகவும் துரதிஷ்டவசமானதும், எமது அடிப்படை சமய மற்றும் சமூக உரிமைகளை மறுக்கும் செயலாகும்.

ஆகவே இந்த விடயத்தில் தாங்கள் தலையிட்டு, 18.05.2022 ஆம் திகதி புதன்கிழமை முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவஞ்சலி மற்றும் பிரர்த்தனை நிகழ்வுகளில் தலையிடாதிருப்பதற்கான பணிப்புகளை முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துதவுமாறு வேண்டுகின்றோம்-என்றுள்ளது. (அ)

## ரணிலின் சட்ட...

தற்போதைய அரசாங்கத்தின் சரியான செயற்பாடுகளைக் கூட்டமைப்பு ஆதரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்ந்த அரசியலைப்புத் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டுமென தொலைபேசி ஊடாக, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எம்.ஏ.சுமந்திரனிடம் எடுத்துரைத்தார் என தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து சுமந்திரன் எம்.பி. தெரிவிக்கையில்-

நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் நெருக்கடி நிலைக்கு மத்தியில், ஸ்திரமான அரசாங்கம் இன்றியமையாததாகும்.

எனவே, தற்போதைய அரசாங்கத்தின் சரியான செயற்பாடுகளை நாம் ஆதரிப்போம்.

பாராளுமன்றத்தின் கீழ் புதிதாக உருவாக்கப்படவுள்ள, சட்ட மறுசீரமைப்புக் குழு, நிறைவேற்றுத்துறை சார்ந்தது அல்ல என்பதாலும், தமிழ் மக்கள் சார்ந்த அரசியலைப்பு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென, பிரதமர், என்னிடம் கோரிக்கை விடுத்ததாலுமே, நான் இதற்கு சம்மதித்தேன்-என்றார். (அ)

## சஜித், மைத்திரி...

வெளியாகியுள்ளது.

இவர்களில் சிலருக்கு அமைச்சுப் பதவியும், ஏனைய சிலருக்கு பிரதி அமைச்சுப் பதவியும் வழங்கப்படலாம் என அறியமுடிகின்றது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டே, ரணிலை ஆதரிக்கும் முடிவை அவர்கள் எடுத்துள்ளனர்.

அத்துடன், சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலரும் புதிய அரசில் இணையவுள்ளனர். (அ)

## ரணிலின் புதிய...

விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசுக்கு ஆதரவு வழங்க முடிவெடுத்துள்ளேன்" - என்று விக்னேஸ்வரன் ஊடகங்களிடம் தெரிவித்தார். வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான விக்னேஸ்வரன் எம்.பி., ரணில் அரசின் அமைச்சரவையில் இடம்பெறுவார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# பிரதிச் சபாநாயகர் பதவிக்காக களமிறக்கும் ரோஹினி கவிரத்ன

கொழும்பு, மே. 15

தமது கட்சியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்னவை, பிரதிச் சபாநாயகர் வேட்பாளராக களமிறக்குவதற்கு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அதேபோல பிரதிச் சபாநாயகர் பதவிக்கு தமது கட்சியின் சார்பில் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷவின் பெயரை முன்மொழிவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உத்தேசித்துள்ளது.

பிரதிச் சபாநாயகராக இரண்டாவது முறையாகவும் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, மறுநாளே அப்பதவியை இராஜினாமா செய்தார்.

இதனால் பாராளுமன்றம் எதிர்வரும் 17 ஆம் திகதி கூடும்போது, முதலாவது பணியாக பிரதிச் சபாநாயகரை தேர்வு செய்ய வேண்டும்.

கடந்தமுறைபோல இம்முறையும் இருவரின் பெயர்கள் முன்மொழியப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் இரகசிய வாக்கெடுப்பு மூலமே தேர்வு நடக்கும்.

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியைக்கூட பெண்ணொருவர் வகித்துள்ளார் (சந்திரிகா). அதேபோல உலகின் முதல் பெண் பிரதமரும் இலங்கை மண்ணில் இருந்துதான் தேர்வானார். (ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க) . எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பெண் எம்.பி. வகித்துள்ளார். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகளையும் வகித்துள்ளனர்.

ஆனால் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற 1947 முதல் இற்றை வரை சபாநாயகராகவோ அல்லது பிரதிச் சபாநாயகராகவோ பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவாகவில்லை.

2018 இல் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு வைத்தியர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே போட்டியிட்டிருந்தாலும் அவர் வெற்றிபெறவில்லை.

இதற்கு முன்னர் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இம்தியாஸ் பாக்கீர் மாகாரை களமிறக்கிய ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை, அப்பதவிக்கு பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பெயரை முன்மொழியவுள்ளது. இதனால் மொட்டு கட்சி பின்வாங்கக்கூடும். அவ்வாறு நடந்தால் ரோஹினி கவிரத்ன ஏகமனதாக தெரிவு செய்யப்படுவார். சுதந்திர இலங்கையில் முதலாவது பெண் பிரதிச் சபாநாயகர் என்ற பதவிநிலை அந்தஸ்தையும் பெறுவார்.

பெண் எம்.பியொருவர் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு வரவேண்டும் என்ற விடயத்தை பிரதமரும் அறிவித்துள்ளார். (அ)

# முன்னாள் எம்.பிக்களின் வீடுகளை தாக்கி சேதப்படுத்திய 4 பேர் கைது!

கொழும்பு, மே. 15

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை தாக்கி சேதப்படுத்திய குற்றச்சாட்டில் பௌத்த பிக்கு ஒருவர் உட்பட நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் எஸ்.எம்.சந்திரசேன, சன்ன ஜயசுமன மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரின் வீடுகளை தாக்கி சேதப்படுத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் மேற் கொண்ட விசாரணைகளை அடுத்தே இவ்வாறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

## சஜித்துக்கு...

இலங்கையை ஸ்திரப்படுத்தும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கு வதை தேசிய பொறுப் பாக கருதி, அதை நிறை வேற்ற கட்சி பேதங்களை கருத்தில் கொள்ளாது தமது அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## ரணிலுக்கு...

ரவளிக்க ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார். (அ)

## ரணிலின்...

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குமிடையில் நேற்று நடந்த கலந்துரையாடலை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் 90க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் சுதந்திரத்தை பாதுகாத்து ஆதரவளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## புதிய...

ராகவும் பதவியேற்றுள்ளார்.

இதேவேளை, பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகவும் காஞ்சன விஜே சேகர, மின்சாரம், எரிசக்தி அமைச்சராகவும் பதவியேற் றுள்ளனர். (அ)

## ராஜபக்ஷ இல்லாத...

துள்ளார்.

ராஜபக்ஷக்கள் இல்லாத அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கை என எதிர்க்கட்சித் தலைவர் தனது கடிதத்தில் பிரதமருக்கு நினைவூட்டியுள்ளார்.

இதேவேளை, புதிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மறுப்பு தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பொருளாதாரம் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு புதிய அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்கும் என பிரதமருக்கு அவர் தெரிவித்துள்ளார். (அ)

## ராஜபக்ஷ அரசின்...

கருத்து தெரிவிக்கையில்-

நாட்டில் பஞ்சம் இருக்காது. பொருளா தார நிலைமையின் தீவிரத்தை முதலில் நாம் பார்க்க வேண்டும். அது பற்றிய முழுமையான கணக்கு யாரிடமும் இல்லை.

முதன்முறையாக ஒரு மருத்துவர் நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை செய்வது போல் உள்ளது. எங் களுக்கு பிரச்னைகள் இருப்பதாக எனக்குத் தெரியும். சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்பு கொள்ளவேண் டும். இந்த ஆண்டு பணம் திரட்ட வேண்டும்.

எங்களுக்கு உதவவும், நிதியுதவி செய்யவும் எங் கள் நட்பு நாடுகளுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன். மேலும் வெளிநாட்டு முதலீட்டிற்கு சரியான சூழலை உருவாக்க வேண்டும் - என்றார். (அ)